பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | உண்மையான வாதம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது | 1 |
| 2. | திருக்குர்ஆனிலிருந்து.... | 2 |
| 3. | நபிமொழியிலிருந்து.... | 2 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து.... | 2 |
| 5. | சர்வ சமய மாநாடு – லாஹூரில் நடைபெற்ற மாநாட்டில் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய கண்கள் கண்ட காட்சிகள் | 4 |
| 6. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் – எதிரிகளின் அழிவின் ஒளியில் | 7 |
| 7. | ஜங்கே முகத்தஸ் – புனிதப் போர் | 13 |


لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பிலிருந்து பரிசுக்கான அறைகூவல்

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழி மற்றும் முந்தைய வேதங்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப இருள் நிறைந்த மற்றும் வழிகேட்டின் காலகட்டத்தில் அல்லாஹ் பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களை இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் அனுப்பினான். அன்னாரின் மகத்தான இலக்கைக் குறித்து திருக்குர்ஆன் இந்த சொற்களில் எடுத்துக் கூறுகின்றது.

لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ

எல்லா மார்க்கத்தின் மீதும் இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். **(61:10)**

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் மகத்தான பணியைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

لَوْ كَانَ الْاِيْمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهٗ رِجَالٌ مِنْ هٰؤُلَاءِ

அதாவது ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் இவர்களில் சிலர் அதனை மீண்டும் உலகில் நிலைநாட்டுவார்கள். சில அறிவிப்புகளில் ரஜலுன் என்ற சொல் வந்துள்ளது. அதாவது ஒரு மகத்தான மனிதர் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி அதனை உலகில் நிலைநாட்டுவார். (புகாரி)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எப்படிப்பட்ட நேரத்தில் தோன்றியுள்ளேன் என்றால் இஸ்லாத்தின் கொள்கைகள் கருத்து வேறுபாட்டினால் நிரம்பி விட்டது. மேலும் எந்தவொரு கொள்கையிலும் கருத்து வேறுபாடு இல்லாமல் இல்லை... **(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 495)**

மேலும் கூறுகின்றார்கள்: இறைவன் இந்த காலத்தை இருள் நிறைந்ததாகவும், உலகம் கவனமின்மையிலும், இணை வைப்பிலும் மூழ்கியிருப்பதையும், உண்மை மற்றும் இறையச்சம் ஆகியவை மறைந்து விட்டதையும் பார்த்து, என்னை அனுப்பியுள்ளான். அதன் மூலம் மீண்டும் உலகில் அறிவு மற்றும் ஞானம், நல்லொழுக்கம் ஆகியவை நிலைபெற வேண்டும்.

**(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 251)**

மேலும் கூறுகின்றார்கள்: நான் பூமியில் வசிக்கின்ற அனைத்து மக்களுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். அவர்கள் ஆசியாவில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரி; ஐரோப்பாவில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரி; அமெரிக்காவில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரியே. **(தர்யாக்குல் குலூப், ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 515)**

மேலும் கூறுகின்றார்கள்: உங்களுக்கு நம்பிக்கை இருக்கமாயின் நீங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். உங்களுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கும் முகமாக நீங்கள் மீண்டும் மீண்டும் அவன் முன்னால் சிரம் தாழ்த்திப் பணிய வேண்டும். இதுவே உங்களுடைய முன்னோர்கள் ஆவலோடு எதிர்பார்த்த காலமாகும். ஆனால் அப்போது இது வரவில்லை. பற்பல தலைமுறைகள் கடந்து சென்றுவிட்டன. இது வரவில்லை. அந்த காலத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். நீங்கள் இதற்கு மதிப்பளிப்பதும், மதிப்பளிக்காமலிருப்பதும் இதிலிருந்து பயன் பெறுவதும், பயன் பெறாமலிருப்பதும் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது.

நான் இவ்விடத்தில் ஒன்றை மீண்டும் மீண்டும் கூறியாக வேண்டும். மார்க்கத்தைத் திரும்பக் கொண்டு வருவதற்காக, மக்களின் உள்ளங்களில் மார்க்கத்தை நிலைநிறுத்துவதற்காக வாக்களிக்கப்பட்ட வழிகாட்டி நானே என்று நான் திரும்பத் திரும்பக் கூறிவருவதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. **(ஃபதஸ் இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 8)**

பத்தாயிரம் ரூபாய் பரிசுக்கான அறைகூவல்: இறைவன் இந்த எளியவனை இந்த காலத்தில் அனுப்பி நூற்றுக்கணக்கான வானத்தின் அடையாளங்களையும், மறைவான விஷயங்களையும், ஞானத்தையும் மேலும் நூற்றுக்கணக்கான ஆதாரங்களையும் எனக்கு வழங்கியுள்ளான். அதன் மூலம் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகள் ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் வெளிப்பட வேண்டும். மேலும் அது பரவ வேண்டும். மேலும் அவர்கள் மீது தனது அத்தாட்சிகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று அவன் எண்ணியுள்ளான். இந்த எண்ணத்தின் காரணமாகத்தான் இறைவன் இந்த எளியவனுக்கு அத்தாட்சிகளை பூர்த்தி செய்வதற்காக இந்த நூலில் பத்தாயிரம் ரூபாய்க்கான அறைகூவலை விடுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான்.

**(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 596 அடிக்குறிப்பு 3)**

இந்த நூலை எழுதியதன் நோக்கம் என்னவென்றால்.... இஸ்லாத்தின் உண்மைக்கான ஆதாரங்கள் மற்றம் திருக்குர்ஆனின் உண்மைத்துவத்திற்கான ஆதாரங்கள் மற்றும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மைத்துவம் ஆகியவை அனைத்து மக்களின் மீதும் வெளிப்பட வேண்டும். மேலும் இந்த உண்மையான மார்க்கம் மற்றும் தூய வேதம் மற்றும் தூய நபியை மறுக்கக்கூடியவர்களை எப்படிப்பட்ட சரியான முறையில் பதிலளிக்க இயலாதவர்களாக ஆக்க வேண்டுமென்றால் இனி அவர்களக்கு இஸ்லாத்திற்கெதிராக மூச்சு விடுவதற்கும் கூட வாய்ப்பு கிடைக்கக்கூடாது.

**(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 23)**

**(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)**

**எந்த இறைவன் என்னை அனுப்பியுள்ளானோ, எந்த இறைவன் மீது இட்டுக்கட்டி கூறுவது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அந்த இறைவன் மீது ஆணையாக! அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியிருக்கின்றான். என்மீது இறங்குகின்ற இந்தத் தூய இறை வெளிப்பாடுகள், ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை), ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) ஆகியவர்களுக்குத் தன் வார்த்தைகளை இறக்கிய அதே இறைவனின் வார்த்தைகளே என்பதை நான் மக்காவிலுள்ள பைத்துல்லாஹ்வில் நின்று கொண்டு சத்தியம் செய்யத் தயாராக இருக்கின்றேன்**

**திருக்குர்ஆனிலிருந்து...**

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பொருள்: நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. உன் கோபத்திற்கு ஆளானவர்கள், வழிதவறியவர்கள் ஆகியோரின் வழியில் அல்லாமல் நீ அருள் புரிந்தவர்களின் வழியில் (நீ எங்களை நடத்துவாயாக). (1:6,7)

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ
اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ
وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا

பொருள்: அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள், அல்லாஹ் அருள் புரிந்தவர்களான, நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்களுள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த்தியாகிகள்), ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்களாவர். (4:70)

**நபிமொழியிலிருந்து....**

۞ عَنْ اَبِیْ هُرَيْرَةَ رَضِیَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِیِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : لَا تَقُوْمُ السَّاعَةُ حَتّٰى يَنْزِلَ عِيْسَى بْنُ مَرْيَمَ حَكَمًا مُقْسِطًا وَاِمَامًا عَدْلًا فَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ وَيَضَعُ الْجِزْيَةَ وَيَفِيْضُ الْمَالُ حَتّٰى لَا يَقْبَلَهٗ اَحَدٌ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"எதுவரை நீதியுடன் தீர்ப்பு கூறுபவராகவும் நீதியுடன் செயல்படுகின்ற இமாமாகவும் இருக்கப்போகின்ற மர்யமின் மகன் ஈஸா தோன்றமாட்டார்களோ அதுவரை கியாமத் வராது. (அன்னார் தோன்றும்போது) அவர்கள் சிலுவையை முறிப்பார்கள். பன்றியைக் கொல்வார்கள். ஜிஸ்யா செலுத்தும் வழிமுறையை முடிவுக்குக் கொண்டு வருவார்கள். மேலும் எத்தகைய செல்வத்தை அவர்கள் பங்கிட்டுக் கொடுப்பார்கள் என்றால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க மாட்டார்கள்."

(சுனன் இப்னி மாஜா கிதாபுல் ஃபிதன் பாபு ஃபித்னதுத்தஜ்ஜாலி வ ஹுரூஜி ஈஸப்னி மர்யம் வ ஹுரூஜி யஃஜூஜ் வமஃஜூஜ்)

......☆......☆......☆......

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் கியாம நாள் வரை புதிய ஷரீஅத்தை உடைய எந்தவொரு நபியும் வர முடியாது. இவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே அல்லாமல் எவரும் நபிப்பட்டம் பெற முடியாது. தம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிலே ஃபனாவாக்கி (மாய்த்து) விடுவதால் தமது பெயர் வானத்தில் முஹம்மது என்றும் அஹ்மது என்றும் ஆகாதவரை எவரும் நபித்துவத்தின் பட்டத்தை நேரடியாகப் பெற முடியாது.

وَمَنِ ادَّعٰى فَقَدْ كَفَرَ

இந்த நிபந்தனையை நிறைவேற்றாது எவராவது தமது நபித்துவத்தைப் பிரகடனப்படுத்துவாராயின் அவர் காஃபிராவார்.

இதில் அடங்கியுள்ள இரகசியமென்னவென்றால் எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விலகி சுதந்திரமான முறையில் தமது நுபுவ்வத்தைப் பற்றி வாதிப்பாரோ அவர் காத்தமுன்னபிய்யீன் என்ற முத்திரையை உடைப்பவராய் இருக்கின்றார். காத்தமுன் நபிய்யீன் என்ற சொல், இந்த அர்த்தத்தையே வலியுறுத்துகிறது. ஆனால் ஒருவர் காத்தமுன்னபிய்யீனோடு ஐக்கியப்பட்டு அவர்களை விட்டு விலகி தனி நபராகாமல், அவர்களிடம் மூழ்கி தமது முழு சாயலையும் தமது தனிப்பட்ட தன்மையையும் அவர்களுக்காக முற்றாய் அர்ப்பணம் செய்து அவர்களின் பெயரையே தாம் பெற்று விட்டால், தெளிவான கண்ணாடியைப் போன்று முஹம்மத்திய முகம் அவரிடம் பிரதிபலித்து விட்டால், அத்தகையவர் காத்தமுன்னபிய்யீனின் முத்திரையைத் தாக்காமலேயே நபி என்று அழைக்கப்படுவார்.

இப்படிப்பட்டவர் பிரதிபிம்பமாகக் காணப்படுவதால் அவர் முஹம்மத்தின் நிழலாகவே இருக்கின்றார். பிரதிபிம்பமாகத் தோன்றியவரின் பெயர் முஹம்மது என்றும், அஹ்மது என்றும் வருவதால் அவர் தம்மை நபி என்று கூறினாலும் முஹம்மது (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனாகவே இருப்பார்கள். அவர் முஹம்மது (ஸல்) அவர்களின் பிரதிபிம்பமாகவும், சாயலாகவும் அவரின் பெயரைப் பெற்றவராகவும் இருப்பார். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் காத்துமன்னபிய்யீன் முத்திரையை உடைக்காமல் வர முடியாது. ஏனெனில் அவருடைய நுபுவ்வத் ஒரு தனிப்பட்ட நுபுவ்வத்தாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிபிம்பம் என்ற நிலையிலும் எவரும் நபித்துவத்தைப் பெற முடியாதென்றால்,

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

எங்களை நேரான பாதையில் நடத்துவாயாக. நீ அருட்கொடை அளித்தவர்களின் பாதையில் என்ற இந்த வசனத்தின் பொருள்தான் என்ன?

எனவே மேற்சொன்ன கருத்தின்படி நான் நபித்துவத்தையும், ரிஸாலத்தையும் பெற்றவன் என்பதை மறுக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இதனால் தான் ஸஹீஹ் முஸ்லிமிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பெயர் நபி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இறைவன் புறமிருந்து மறைவான செய்தியைப் பெறுகிறவர் நபி என்ற பெயரைக் கொண்டு அழைக்கப்படாவிட்டால் பிறகு அவரை எப்பெயர் கொண்டு அழைப்பது? என்பதை நீங்களே கூறுங்கள்.

அவருடைய பெயரை முஹத்தஸ் என்று அழைக்க வேண்டுமென கூறுவீர்களேயானால் தஹ்தீஸ் என்பதன் பொருள் எந்த ஓர் அகராதியிலும் மறைவான விஷயத்தை அறிவிப்பதற்காக உபயோகிக்கப்படுவதில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன். ஆனால் நுபுவ்வத்தின் அர்த்தம் மறைவான விஷயத்தை அறிவித்தல் என்பதாகும். நபி என்ற சொல் அரவு மொழிக்கும், எபிரேய மொழிக்கும் பொதுவானதாகும். எபிரேய மொழியில் இந்தச் சொல் நாபி என்று உச்சரிக்கப்படுகிறது. இது நபா என்ற மூலச்சொல்லிலிருந்து உருவானதாகும்.

இதன் பொருள் இறைவன் புறமிருந்து செய்தி பெற்று முன்னறிவிப்பு செய்பவர் என்பதாகும். மேலும் ஒருவர் நபியாவதற்கு அவர் ஒரு புதிய ஷரீஅத் கொண்டு வர வேண்டும் என்பது அவசியமில்லை. நுபுவ்வத் மூலமாகவே ஒருவருக்கு மறைவான விஷயங்கள் வெளிப்படுகின்றன. இது ஒரு தெய்வீக சன்மானமாகும். எனவே இன்றைய நாள் வரை நான் ஏறக்குறைய 150 முன்னறிவிப்புகளை இறைவன் புறமிருந்து பெற்று, அவை தெளிவாக நிறைவேறியிருப்பதை என் கண்களால் நானே கண்டிருக்கும்போது, நான் எவ்வாறு என்னை நபி அல்லது ரஸூல் என்று கூறிக்கொள்வதை நிராகரிப்பேன்?

இறைவனே எனக்கு இப்பெயர்களைச் சூட்டியிருக்கும்போது அவற்றை நிராகரிப்பதற்கு நான் யார்? அல்லது இறைவனுக்கு எதிராக மற்றவர்களுக்கு நான் ஏன் அஞ்ச வேண்டும்?

எந்த இறைவன் என்னை அனுப்பியுள்ளானோ, எந்த இறைவன் மீது இட்டுக்கட்டி கூறுவது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அந்த இறைவன் மீது ஆணையாக! அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியிருக்கின்றான்.

மேலும் நான் எவ்வாறு திருக்குர்ஆனின் வசனங்கள் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றேனோ அவ்வாறே என்மீது இறைவன் இறக்கும் வஹியின் (தெளிவான இறைவெளிப்பாட்டின்) மீதும் ஓர் அணு அளவும் வித்தியாசமின்றி நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கும் அவனது அடையாளங்களால் இந்த இறைவெறிப்பாட்டின் உண்மை எனக்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

என்மீது இறங்குகின்ற இந்தத் தூய இறை வெளிப்பாடுகள், ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை), ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) ஆகியவர்களுக்குத் தன் வார்த்தைகளை இறக்கிய அதே இறைவனின் வார்த்தைகளே என்பதை நான் மக்காவிலுள்ள பைத்துல்லாஹ்வில் நின்று கொண்டு சத்தியம் செய்யத் தயாராக இருக்கின்றேன்.

எனக்காக பூமியும் சாட்சி பகர்ந்தது. வானமும் சாட்சி பகர்ந்தது. இவ்வாறே நான் அல்லாஹ்வின் கலீஃபவாக இருக்கிறேன் என்பதை வானமும் பூமியும் சாட்சி கூறின. ஆனால் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப நான் (மக்களால்) மறுக்கப்படுவதும் கட்டாயமானதாக இருந்தது. எனவே எவர்களின் மனம் திரையிடப்பட்டிருக்கின்றதோ அவர்கற்ள என்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எப்பொழுதும் இறைவன் தன்னுடைய ரஸூல்மார்களுக்கு உதவி புரிந்து வந்திருப்பதுபோல் எனக்கும் உதவி புரியானென்பதை நான் அறிவேன். என்னை எதிர்த்து நிற்க எவராலும் முடியாது. ஏனெனில் இறைவனின் ஆதரவு அவர்களுக்கில்லை.

(ஏக் கலத்தீ கா இஸாலா, ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 208)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

## பத்ர் பத்திரிகையை நீங்களும் படித்து உங்களது நண்பர்களையும், சகோதரர்களையும் இந்த பத்திரிகையை படிப்பதற்காக கவனமூட்டவும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பத்ர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது தமது தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள் :

இந்த பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்கள் நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர். மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பத்ர் துறையும், பத்ர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்கு குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருள்களை சேகரிப்பதற்குமான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது மிகவும் முக்கியமான மற்றும் எழுச்சியூட்டக்கூடிய இந்த கூற்றுகளுக்கேற்ப, இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால்,

ஒவ்வொரு வீட்டிலும் பத்ர் பத்திரிகை படிப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். இதில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுகள் மட்டுமின்றி ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆ பேருரை மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. இதைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கட்டாயமாகும். அல்லாஹ்வின் அருளால் பத்ர் பத்திரிகை தற்போது ஹிந்தி, வங்காளம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஒடியா ஆகிய மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றது.

அஹ்மதிகளில் எவர்கள் தற்போது வரை பத்ர் பத்திரிகையை வாங்கவில்லையோ அவர்கள் பத்ர் பத்திரிகையை தாமும் வாங்கி படிக்க வேண்டும். மேலும் தம்முடைய குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள இதர உறுப்பினர்கள் அனைவரையும் இந்த பத்திரிகையை படிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கேற்பே செயல்படும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

பத்ர் பத்திரிகை முறையாக கிடைக்கவில்லை என்பது தொடர்பான புகாராக இருந்தாலும் சரி; அல்லது சந்தா செலுத்துவது தொடர்பான விஷயமாக இருந்தாலும் சரி கீழ்க்கண்ட எனது தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

+91 1872 224757 +91 94170 20616

managerbadrqnd@gmail.com

**நவாப் அஹ்மது**
(பத்ர் பத்திரிகையின் மேனேஜர்)

## சர்வ சமய மாநாடு – லாஹூரில் நடைபெற்ற மாநாட்டில் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய கண்கள் கண்ட காட்சிகள்

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி (ரலி) அவர்களின் எழுத்துக்களிலிருந்து....

(தமிழாக்கம்: முஅல்லிம் M. ஷாஜஹான்)

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகத்தான கட்டுரையாகிய இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் தொடர்பாக அன்னாரின் சஹாபி ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி (ரலி) அவர்கள் ஒரு கட்டுரை 20 ஜூலை 1946 ல் மாபெரும் சர்வசமய மாநாடின் சொற்பொழிவு இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற தலைப்பில் எழுதினார்கள். அந்த கட்டுரையை சீரத்துல் மஹ்தி தொகுதி இரண்டிலிருந்து வாசகர்கள் பயன்பெற எடுத்துத் தருகிறோம். அன்னார், இந்த கட்டுரையில் அந்த மாநாடு மற்றும் சொற்பொழிவின் மிகவும் நம்பிக்கையை வலுபெறச் செய்யும் கண்கள் கண்ட நிலைகளை எடுத்துக்கூறியுள்ளார்கள்.)

(1) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது ( அலை) அவர்களின் தப்லீகின் ஆர்வம் மற்றும் இறைவனின் வார்த்தைகளை பரப்புவதற்கு இருந்த அர்ப்பனிப்பின் நிலையை எடுத்துக்கூறுவது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். அல்லாஹு அஃலமு ஹைசு யஜ்அலு ரிஸாலதஹூ– இறைவன், ஹுஸூர் அவர்களின் அந்தஸ்து மற்றும் பணியை இஸ்லாத்தை மற்ற அனைத்து மார்க்கங்களின் மீது வெற்றி பெற செய்ய நியமித்தான். மேலும் எந்த உணர்வு இந்த தொண்டின் அருளாக உள்ளதோ அது பல்லிஃ மா உன்ஸில இலைக மிர்ரப்பிக ஃபஇல்லம் தஃப்அல் ஃபமா பல்லஃத ரிஸாலதஹூ என்ற இறைவனின் கட்டளை எப்போதும் நிலைநாட்டப்படுகிறது.

ஹுஸூர் அவர்கள் தப்லீகின் உரிமையை நிறைவேற்றுவதில் எந்த குறையையும் விட்டுவைக்கவில்லை, மேலும் அசட்டையாக இருந்துவிடவும் இல்லை. இரவென்ன பகலென்ன ஹுஸூர் அவர்களுக்கு இந்த கவலையே இருக்கும் மேலும் ஹுஸூர் அவர்கள் தப்லீகின் எந்த சந்தர்பத்தையும் கைநழுவ விடுவதில்லை. எழும்போதும் அமரும்போதும் மேலும் தனிமையிலும், அன்பர்களுடனும் ஆக எந்நிலையிலும் இதே கவலை மற்றும் சிந்தனையில் இருப்பார்கள்.

எனவே ஹுஸூர் அவர்களின் வாழ்க்கையின் அனைத்து பக்கமும், தூய வாழ்வின் அனைத்து நொடிப்பொழுதின் நாவின் நிலை இந்த கூற்றின் சாட்சியும் நீதமான சான்றுமாகும். நீண்ட வாசித்தலும் மற்றும் ஹுஸூர் அவர்களின் ஆழிய எழுத்துக்களை ஒரு பக்கம் வைத்துவிட்டு ஹுஸூர் அவர்களின் ஒரு சில வரிகளை கொண்ட பிரசுரங்களையே நடுநிலையான எண்ணத்துடன், ஒரு தலைபட்சத்திலிருந்து விலகி , ஹுஸூர் அவர்கள் 9 டிசம்பர் 1890 ல் வெளியிட்டதினை பார்த்தால் நிச்சயமாக எனது இந்த கூற்றை உண்மைப்படுத்த வேண்டியது வரும்.

ஹுஸூர் அவர்களின் இந்த உண்மையான துடிப்பு மற்றும் தூய எண்ணத்தின் விளைவாகவே அன்னாருக்கு இறைவன் அனைத்து ரீதியிலும் அசாதாரணமான உதவியையும் ஒத்துழைப்பபையும் வழங்கினான்; மேலும் மறைவான ரீதியில் தேவைகளை நிறைவு செய்தான். ஹுஸூர் அவர்கள் இந்த அருள் மற்றும் கருணையை பற்றி பொரும்பாலும் அருள்களின் வெளிப்பாடு என்ற ரீதியில் கூறுவது உண்டு. இறைவனின் அருள் மற்றும் கருணை எவ்வளவு உள்ளதென்றால் , இங்கு நமது உள்ளத்தில் ஒரு விருப்பம் உருவாகிறது அல்லது ஏதேனும் தேவை ஏற்படுகிறது அங்கு இறைவன் அதனை நிறைவு செய்வதற்கான ஏற்பாட்டை செய்து விடுகிறான்.

(2) 1892 இரண்டாம் பாதி காலமாக இருந்தது, திடீரென ஒரு அந்நிய மனிதர் சாது தன்மையிலான ே-ாகன் சந்தர் என்ற பெயரை கொண்டவர் ஈரத் துணியை உடுத்தியவாறு காதியான் வந்தார். மேலும் நமது கூட்டங்களில் எந்த சிரமமும் இன்றி, ஒரு நபராக மிகவிரைவில் தென்படலானார் . ஒரு அறை தினம் சைய்துனா ஹஸ்ரத் ஹகீமுல் உம்மத் மவ்லானா மவ்லவி நூருத்தீன் (ரலீ) அவரகளின் மஜ்லிஸ்களில் கலந்து கொண்ட பின் மறுநாளே சைய்துனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மாலை நேர அவையில் மற்றும் காலை உலாவில் இணைந்து கொண்டு ஹுஸூர் அவர்களின் சிறப்பான கவனத்தை ஈக்கக்கூடியவர் ஆனார்.

ஏனெனில் அந்த மனிதர் தன்னை உண்மையை தேடுபவராக, சத்தியத்தை கற்பவராக வெளிப்படுத்திக்கொண்டு தனது ஆன்மீக தாகத்தை தனித்துக்கொள்ள வானத்தின் நீரை தேடியவராக தொலைவு மற்றும் அருகாமை கிராமங்கள் மாறாக மூலை முடுக்கொல்லாம் சுற்றித்திறிந்து காதியான் என்ற தூய பகுதியில் தமது குறிக்கோள் மற்றும் நோக்கத்தை பெறும் நம்பிக்கையில், எதையேனும் பெற்றே திரும்பி செல்வது என்ற எண்ணத்தில் வந்திருந்தார். அவரின் நல்ல எண்ணத்தின் விளைவாகவே அவர் முற்றிலும் அந்நியராக இருந்தும் மிகவிரைவில் நம்மவர்களில் இணைந்து கொண்டார். அவர் தனது ஏழ்மை மற்றும் தேவைகளை ஈரத்துணிகளில் மறைத்த சாதுவாக இருக்கவில்லை, பணம் காசின் தேவையை யாசிப்பவராகவும் இருக்கவில்லை.

காதியானில் விநியோகம் செய்யப்படும் கருவூலத்தின் செய்திகளினால் ரூபாய் காசுகளின் பேராசை அவரை இழுத்துக்கொண்டு வரவில்லை. மாறாக உண்மையிலேயே சத்தியத்தை தேடியவராக உண்மையை கற்பவறாக இருந்தார். அவ்வாறு இல்லை எனில் இறைவனின் தூயமனிதர் காலத்தின் மஸீஹ் அவர்களின் பார்வை முழுமையானது அனைத்தையும் உணரக்கூடியது ஆகும், இறைவனால் வழங்கப்பட்ட ஒளியால் காண்பவராக இருந்த அவர்கள் இவ்வாறு அவர் பக்கம் கவனம் செலுத்தி இருக்கமாட்டார்கள்.

(3) ே-ாகன் சந்தர் ஒரு படித்த அறிவாலி மனிதர் ஆவார், அரசாங்கத்தில் நல்ல பொறுப்பில் இருந்தவர் ஏதோ சில சம்பவங்களினால் உலக பற்றின்மையின் ஒரு அழியாத எண்ணம் அவரின் உள்ளம் மற்றம் மூளையில் ஆட்கொண்டுவிட்டது . அவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் மட்டுமில்லாது சஹாக்கள் மற்றும் உறவினர்கள் வரை அவரை விட்டு பிறிந்து விட்டனர் அவர் தனித்தவர் ஆனார். உள்ளம் மற்றும் மூளையில் உதித்த சிந்தனை உள்ளுக்குள்ளே வளர்ந்து வந்தது. அழிந்து போகும் பொருட்களின் தாக்கம் அவரின் எண்ணங்களின் போக்கை ஏதோ அழிவில்லாத மற்றும் நிலைத்திருக்கும் இருப்பை தேடுவதின் பக்கம் திசை திருப்பியது, அதன் விளைவால் அவர் தனது பணியை விட்டு உலகைத் துறந்து உண்மையை தேட உறுதி கொண்டார்.

மேலும் சாதுவாக மாறி சுற்றித்திரிந்து தேடத்தொடங்கினார். எத்தனை காலம், எங்கெங்கெல்லாம் தேடித்திரிந்தார் எனத் தெரியவில்லை. அவர் என்ன கேட்டாரோ, என்ன பார்த்தாரோ, அதன் பிறகு யாரோ அவருக்கு நமது எஜமானர் தலைவர் காலத்தின் நேர்வழிகாட்டியை பற்றி கூற, மேலும் காதியானின் விபரம் தெரிவிக்கபட்டதும், அவர் உண்மையான உள்ளத்துடன், தூய கொள்கை பிடிப்புடன் வந்து சேர்ந்து நோக்கம் மற்றும் குறிக்கோளை அடைவதின் முயற்ச்சியில் மூழ்கிவிட்டார். ஹுஸூர் அவர்களின் அருகாமையில் இருந்து அருளை பெறத் தொடங்கினார் மேலும் எந்தளவுக்கு ஈடுபடலானார் எனில் அவரின் அனைத்து மகிழ்ச்சி, திருப்தி, மற்றும் நிம்மதி ஹுஸூர் அவர்களின் அருகாமை மற்றும் அவர்களின் தூய கூற்றுகளுடன் தொடர்புடையாதாகி விட்டது அதன் காரணமாக அவர் இங்கேயே தங்கிவிட முடிவு செய்தார்.

ஆனால் இறைவன் அவர் மூலம் தனது ஓர் அடையாளத்தை வெளிப்படுத்துவது திட்டமாக இருந்தது மேலும் வல்லமையின் ஆச்சரியத்தை காண்பிப்பது நோக்கமாக இருந்தது, அதற்காக அந்த

அருக்குரியவன் எத்தனை மாற்றங்களை செய்தான், உலக அனுக்களில் குறிப்பான மாறுதல்களை செய்தான் மேலும் ஒரு மனிதரை காதியான் வந்தடையச் செய்தான் அவர் லாலா என்றும் பிறகு மிஸ்டர், பாவா என்றும் இறுதியில் சுவாமி ோகன் சந்தர் என்ற பெயரில் அறியப்பட்டார்.

(4) விருந்தோம்பல் என்ற பண்பு நபிமார்களின் நடைமுறையாகும், ஹுஸூர் அவர்களுக்கு இந்த பண்பில் உயரிய நிலை இருந்தது. அதனுடன் நல்முறையில் நடத்தல், கருணை மற்றும் பரிவில் ஹுஸூர் அவர்களுக்கு ஈடு அவர்களே ஆவார்கள். மகத்தான பண்பாகிய உள்ளங்களை இணைத்தலுடன் பரிவு மற்றும் படைப்பினங்களுக்கு நன்மையை நாடுவதில் ஆர்வம், ஹுஸூர் அவர்களிடம் இருந்த ஒப்பில்லா முன்மாதிரி ஆகும். இந்த அனைத்து நற்பண்புகள் மற்றும் அருள்கள் மட்டுமில்லாது உண்மை மற்றும் அறிவு, ஞானத்தின் கருவூலமும் ஹுஸூர் அவர்களிடம் இருந்தது, அது ஹுஸூர் அவர்கள், இறைதொடர்பு மற்றும் இறை சன்னிதானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு சான்று ஆகும்.

மேலும் இந்த ஆழிய ஞானங்களுடனே இறைவனுடன் உரையாடும் வாய்ப்பு மற்றும் துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுதலின் உதாரணம் எவ்வாறான அருள்கள் எனில் அதிலிருந்து எந்த நல்லியல்பு மற்றும் தூய சிந்தனை கொண்வரும் தாக்கம் பெறாமல் இருக்கமுடியாது. உண்மையில் இந்த விசயங்களை அறியாத உலகம், மந்திரம் ஏமாற்று என்ற பெயரை தந்து ஹுஸூர் அவர்களை விட்டு உலகனைத்தையும் தூரத்தை மேற்கொள்ளும் வேலையை செய்துள்ளனர். சுவாமி ோகன் சந்தர் அவர்களும் இந்த கராமாத்தில் ஆட்பட்டார்கள்.

மேலும் எந்த பொருளின் தேடல் அவருக்கு இருந்ததோ அந்த பொருள் அவருக்கு உலகில் எங்கும் கிடைக்க வில்லை இறுதியில் இறைவனின் சிறப்பான நுட்பத்தின் கீழ் அவருக்கு எதன் தேடல் இருந்ததோ அவை அனைத்தும் காதியானில் கிடைத்தது. உலககெங்கிலும் காணாத கேட்காத அவை அனைத்தையும் அவர்கள் இங்கு கண்டார்கள். அவருக்கு எந்த பொருளின் விருப்பம் தேடல் இருந்ததோ இறுதியில் இறைவன் வழங்கியதில் அவர் சந்தோ-ம் அடைந்தார். ஆயினும் ஹுஸூர் அவர்களின் உள்ளத்தின் ஆசையை நிறைவேற்ற ோகன் சந்தர் சாஹிபின் இருப்பை உறுவாக்கிய இறைவனின் இந்த அருளினால் அவரைவிட அதிக மகிழ்ச்சியில் நமது எஜமானர் இருந்தார்கள்.

(5) ஹுஸூர் அவர்களுக்கு சர்வசமய மாநாடு நடைபெறவேண்டும்,அதில் ஹுஸூர் அவர்களுக்கு, திருக்குர்ஆனின் மகத்துவம் மேன்மைகள் மற்றும் முஅஜிஸாக்கள் மற்றும் இஸ்லாத்தின் ஆழகை எடுத்துக்கூறும் சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும், ஒவ்வொரு மார்க்கத்தின் பிரதிநிதிகளும் தமது மார்க்கத்தன் மேன்மைகளை எடுத்துக்கூற வேண்டும், அதன் மூலம் இந்த போட்டியின் மைதாணத்தில் இறைவனின் வார்த்தைகள் பரவவேண்டும், இஸ்லாம் மேலானதாகவும், ரஸுலெ அக்ரம் ( ஸல்) அவர்களின் உண்மை தன்மை வெளிப்படவேண்டும் என்ற நீண்ட நாள் ஆசை இருந்தது. எனவே ஹுஸூர் அவர்களின் ஆசையை நிறைவேற்றுவதற்கு இறைவன் சுவாமி சாஹிபை காதியான் அனுப்பி வைத்தான், ஹுஸூர் அவர்களின் ஆலோசனையை அவர், உண்மை மற்றும் பொய்யின் சரியான ரீதியில் வேறுபாடு மற்றும் உண்மையான அளகோளாக உறுதிகொண்டு அதன் ஏற்பாட்டிற்கு தமது சேவையை முன்வைத்தார், பிறகு அதன் பணிகளில் ஈடுபட்டார். இந்து பிறகு காவி உடையின் காரணமாகவும், அறிவு மற்றும் அனுபவம் காரணமாகவும் அவருக்கு இந்துக்களின் அனைத்து எண்ணங்கள் மற்றும் பிரிவினர்களிளும் ஆதரவு கிடைத்தன மேலும் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்பட்டது மேலும் அந்த வேலைக்கான ஒரு அசைவு உறுவாகியது.

மேலிட வழிகாட்டல்- ஆலோசித்தல் மற்றும் ஆலோசனை, அவர்களுக்கு எதிர்வரும் அனைத்து சிரமங்களின் தீர்வாகவும், மேலும் இந்த காரியம் கை கூடிவரவேண்டும் என்பதற்காக அவருக்கு எல்லா ரீதியிலும் உதவியும் ஆர்வமூட்டலும் வழங்கப்பட்டது. சிலசமயம் அவர் முன்னேற்பாடு ரீதியில் தாமாகவே காதியான் வருவார், சில சமயம் குறிப்பிட்ட தூதுவர்கள் மூலம் அவருக்கு தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன. இவ்வாறாக எதிர்பார்க்கப்பட்ட மாநாடு நடப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலில் ஒரு கட்டமைப்பு ஆயத்தம் செய்யப்பட்டது மேலும் வேலை செய்கின்ற மனிதர்கள் மற்றும் செலவினங்களின் பெரும் பகுதியின் ஏற்பாட்டை ஹஸ்ரத் அக்தஸ் அவர்களிடம் பார்த்து, அந்த கட்டமைப்பில் உயிரோட்டம் ஏற்பட்டது. இவ்வாறாக சுவாமி ோகன் சந்தர் சாஹிப் அவர்கள் , ஹுஸூர் அவர்களின் மார்க்க விருப்பத்தை நிறைவேற்ற ஒரு மறைவான வானவரின் பணியை செய்தார்.

(6) இறைவா ! இறைவா ! என்று இறுதியில் பெரும் சிரமக் குழிகளை கடந்து, தண்ணீர் இல்லா வனங்களை கடந்த பின்னர் மாநாடு அதாவது மாபெரும் சர்வசமய மாநாடு நடத்தப்படுவதற்கான தேதி முடிவாகி 26 முதல் 28 டிசம்பர் 1896 என அறிவிக்கப்பட்டது. டவுண் ஹால் லாஹுரில் நடைபெறுவதாக அறிவிப்பு செய்யப்பட்டது. கண்ணியத்திற்கு உரியவர்கள் மற்றும் தலைவர்கள் அதில் ஞானவான்,,நண்பர், மற்றும் தோழர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது என்ற தகவலால் உலகனைத்தின் ஆட்சி எவருக்காவது கிடைத்தால் ஏற்படும் மகிழ்ச்சியை போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மகிழ்ச்சிக்குள்ளானார்கள்.

அப்போது ஹுஸூர் அவர்கள் இந்த மாநாட்டிற்காக கட்டுரை எழுதுவது என முடிவேடுத்தார்கள் ஆனால் இறைநாட்டத்திற்கு ஏற்ப ஹுஸூர் அவர்களின் உடல் நிலை சுகவீனம் ஆனது மேலும் இந்நிலை சற்று நீண்டதாகவும் ஆனது. ஆயினும் மாநாட்டின் தேதி அருகில் இருந்தாலும் கட்டுரை முழுமையாகமல் இருந்துவிடக்கூடாது என்ற அச்சத்தாலும் ஹுஸூர் அவர்கள் நோய் மற்றும் கஷ்டத்தின் நிலையிலேயே கட்டுரை எழுத ஆரம்பித்தார்கள். இந்நாற்களில் ஹஸ்ரத் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் மர்ஹூம் (ரலி) அவர்கள் ஏதோ தேவையின் காரணமாக சியால்கோட் சென்றிருந்த போது நோய்வாய் பட்டார்கள், அவர்கள் நோய்வாய் பட்ட தகவலினால் அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளமுடியாது என்ற அச்சம் இருந்தது, நீண்ட யோசனை மற்றும் ஆலோசனைக்கு பிறகு ஹுஸூர் அவர்களின் கட்டுரையை காஜா கமாலுத்தீன் சாஹிப் வாசிப்பார்கள் என்ற முடிவு எடுக்கப்பட்டது. எனவே இந்த முடிவுக்கு ஏற்ப இவ்வாறு தீர்மாணம் செய்யப்பட்டது.

(அ) ஹுஸூர் அவர்களின் கட்டுரையை ஹஸ்ரத் முன்ஷீ ஜலாலுத்தீன் சாஹிப் பாலானி ஜில்லா குஜ்ராத் அவர்கள் நகல் செய்வார்கள் காஜா கமாலுத்தீன் சாஹிப் வாசிப்பதற்கு தடங்கள் இல்லாமல் இருக்க, அதற்கு நூல் வடிவம் தர , ஹஸ்ரத் பீர் ஜீ சிராஜுல் ஹக் சாஹிப் நுஃமானி அவர்களிடம் ஒப்படைக்கப்படும். ஆனால் ஹுஸூர் அவர்களின் நோயின் நிலை மேலும் அதிகம் ஆனதின் காரணமாக கட்டுரை தயாராவதில் இடைவெளி ஏற்பட்ட போது இரு தோழர்களும் இணைந்து அதனை முழுமை செய்தனர்.

(ஆ) மாநாட்டில் வாசிக்கும் போது எந்தவித தவறோ அல்லது திக்கலோ ஏற்பட்டு. கட்டுரையின் இனிதையும் தாக்கத்தையும் கெடுத்துவிடாமல் இருக்க, இந்த கட்டுரையில் எந்தளவு திருக்குர்ஆன் வசனங்கள், ஹதிஸ் அல்லது அரபி வாசகங்கள் வந்திருந்தனவோ அதனை அழகிய எழுத்தில் தனியாக எழுதி காஜா சாஹிபுக்கு நன்றாக மனனம் செய்யவைத்து விடுவது. என தீர்மானம் செய்யப்பட்டது.

(7) ஹுஸூர் அவர்களின் இந்த கட்டுரை அழகிய எழுத்தில் எழுதி காலை நடை உலாவின் போது சொல்லுக்கு சொல் வாசித்துக் காட்டப்படும், ஹுஸூர் அவர்களின் பொதுவான வழக்கமும் இவ்வாறே இருந்து வந்தது, ஏதாவது நூல் எழுதினால் அல்லது பிரசுரம் மற்றும் தூதுமடல் எழுதினால் அதன் கட்டுரையை மஜ்லிஸில் மீண்டும் மீண்டும் எந்தளவுக்கு எடுத்துக் கூறுவார்கள் எனில் அது தொடர்ச்சியாக வருகை தரும் குத்தாம்களின் உள்ளத்தில் பதிந்துவிடும். அந்த நாற்களில் காலை

நடை உலா பொதுவாக காதியானுக்கு வடக்கிலுள்ள படிர் பக்கம் செல்வார்கள், அந்த கட்டுரையை கேட்கும் நோக்கத்தில் காதியானில் உள்ள நபர்கள் மற்றும் விருந்தினர் அனைவரும் ஆர்வம் மற்றம் மகிழ்ச்சியுடன் நடை உலாவில் கலந்து கொள்வார்கள். அவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய பதினைந்து, இருபது அல்லது இருபத்தைந்து வரை இருக்கும்.

கட்டுரையின் சில பகுதிகளுக்கு ஹுஸுர் அவர்கள் நடந்துகொண்டே விரிவுரையும் வழங்குவார்கள், இந்த எழுத்து மற்றும் உரையில் புதுப்புது கருத்துகள் வினோதத்திலும் வினோதமான ஆழிய மற்றும் ஈமானை வலுவூட்டும் சான்றுகள் மற்றும் ஆதாரங்கள் நிறைந்திருக்கும். அந்நாற்களின் ஹுஸுர் அவர்கள் நோய்வாய் மற்றும் பலவீனமாக இருந்தும் எதற்காக காலை நடை உலாவிற்காக வெளியேரினார்களோ, அதில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவியின் சில ஒற்றர்களும் ஹுஸுர் அவர்களின் கட்டுரையை கேட்டு அவருக்கு ரிப்போர்ட் கொடுத்து வந்தனர் என்பது பிறகு தெரியவந்தது. எனவே ஹுஸுர் அவர்களின் கட்டுரையின் பெரும்பாலான வசனங்களை ஹுஸுர் அவர்கள் மாலையில் முத்தை கோர்த்தை போன்று சமயசந்தர்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தி இருந்தார்கள், அதனை மவ்லவி சாஹிப் தமது கட்டுரையில் ஓர் இடத்தில் ஒன்று சேர்த்துவிட்டார்கள், அதற்கு அங்கும் தொடர்பும் இல்லை சமயசந்தர்ப்ப இணைப்பும் இருக்கவில்லை.

(8) ஜனாப் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் கட்டுரையை படித்து வந்தார்கள், படிக்கும் முறைகளின் பயிற்ச்சியை மேற்கொண்டு வந்தார்கள், பார்வையாளர்கள் அதிக தாக்கத்திற்குள்ளாக வேண்டும் என்பதற்காக வாசிக்கும் முறையில் புதுமையை உறுவாக்க முயற்ச்சித்து வந்தார்கள் . திருக்குர்ஆனின் ஆயத்துகள், ஹதீஸ்கள் அல்லது அரபி சொற்கள் மற்றும் வாக்கியங்களை நன்றாக மனனம் செய்ய முயற்ச்சி செய்து வந்தார்கள். காஜா சாஹிப் அவர்களுக்கு உருதுவில் சிறப்பான புலமை இயற்கையாகவே எங்கு இருந்ததோ, அங்கு முயற்ச்சி செய்தும் திருக்குர்ஆனின் ஆயத்துகளை ஓதுவதில் அதிகமான குறைகள் இருந்தது , அதனை காஜா சாஹிப் ஆர்வத்துடன் முயற்ச்சித்தும் முழுமை செய்ய இயலாமல் போனது. மேலும் அதே நாற்களில் அவரின் சில இரகசிய நண்பர் வாயிலாக தெரியவந்ததாவது, உண்மையில் காஜா சாஹிப் அவர்களுக்கு கட்டுரையின் மகத்துவம்,மேன்மை, உயர்வு மற்றும் சிறப்புத்தன்மை தொடர்பாக சந்தேகம் இருந்தது, அதன் தாக்கம் அவர் எடுத்துரைப்பதிலும், வாசிப்பின் முறையில் ஏற்படுவது கட்டயமானதாகும், இந்த விசயம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வரை செல்லாமல் இருப்பது சாத்தியமில்லை.

(9) மாநாட்டிற்கு சில நாட்களுக்கு முன் ஹுஸுர் அவர்களுக்கு இறைவன் இல்ஹாமின் மூலம் இந்த கட்டுரை தொடர்பாக வழங்கிய நற்செய்தி : இந்த கட்டுரை அனைத்தின் மீதும் வெற்றி கொள்ளும். மேலும் உள்ளங்களில் குடிகொள்ள தக்க ஏற்பை பெறும் மேலும் இந்த செயல் உண்மைக்கான ஓர் அடையாளம் ஆகும் . எனவே ஹுஸுர் அவர்கள் 21 டிசம்பர் 1896 ல் உண்மையை தேடுபவர்களுக்கு ஒரு மகத்தான நற்செய்தி என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் எழுதி எழுத்தரிடம் ஒப்படைத்தார்கள் மேலும் ஒரு பொருட்டில்லா அடிமையாகிய என்னை நினைவுகூறும் பாக்கியத்தை வழங்கி கூறினார்கள்:

மியான் அப்துர் ரஹ்மான் ! இந்த பிரசுரத்தை அச்சடித்து நீங்களே லாஹுர் கொண்டு செல்லுங்கள் மேலும் காஜா சாஹிப் அவர்களிடம் மாநாடு ஏற்பாட்டிற்காக ஒரு நாள் முன்னே லாஹுர் சென்று விட்டார்கள் கொடுத்து என் புறமிருந்து வலியுறுத்தி விடுங்கள், இதனை அதிகமாக பரப்பவேண்டும் மேலும் தேவை ஏற்பட்டால் அங்கேயே அச்சடித்துக் கொள்ளுங்கள், என் சார்பாக மிகவும் வலியுறுத்தி கூறுங்கள் ஏனெனில் அவர் சில நேரம் பயந்துவிடுகிறார். மீண்டும் மீண்டும் இழுத்தமாக பயப்படவேண்டாம் என இந்த செய்தியை தெரிவித்துவிடுங்கள், மக்களின் எதிர்பின் எண்ணம் இந்த பணியில் தடையாக ஒருபோதும் இருக்கக்கூடாது, தடுப்பவர்களால் தடைபட்டு போக இது மனிதனின் வேலை அல்ல மாறாக இறைவனின் வேலை ஆகும் அது எந்நிலையிலும் நிறைவேறி தீரும்.

(10) பிரசுரம் நடு இரவு தயாரானது நான் அப்போதே அதனை எடுத்துக்கொண்டு பட்டாலவிற்கு நடையாக புறப்பட்டேன். 22 டிசம்பர் 1896 மதியவேளையில் லாஹுர் வந்தடைந்தேன். இந்நாற்களில் ஜனாப் காஜா சாஹிப் லாஹுரின் பிரபளமான மஸ்ஜிது வஸீர் கான் அருகில் ஒரு குறுகலான தெருவில் தங்கிவந்தார்கள், அங்கு நான் அவர்களை தேடி சந்தித்தேன் மேலும் பிரசுரத்தின் பன்டல் மற்றும் ஹுஸுர் அவர்களின் கட்டளையை தெளிவாக எடுத்துக் கூறினேன். மாறாக திரும்பத்திரும்ப எடுத்துக்கூறினேன், அப்போது காஜா சாஹிபுடன் அங்கு மேலும் இரு நண்பர்கள் இருந்தனர் அவர்களின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. காஜா சாஹிப் அவர்கள் பிரசுரத்தின் பன்டலை திறந்தார்கள், பிரசுரத்தின் கட்டுரையை படித்த போது அவரின் முகம் மகிழ்ச்சியில் மலர்வதற்கு பகரமாக சுருங்கி சோகமாக மாறுவதை நான் பார்த்தேன், மேலும் என்னை விளித்தவராக கூறினார்:

மியான்! இங்கு நாம் எவ்வித சிரமங்களை எதிர்கொள்கிறோம் என்பது ஹஸ்ரத் சாஹிபுக்கு என்ன தெரியும், மேலும் எதிர்ப்பின் வேகம் எவ்வளவு உள்ளது , இந்த நிலையில் இந்த பிரசுரத்தினை அச்சிட்டால் இது பெரிய வெடி குவியலில் தீப்பொறியின் வேலையை செய்யும் மேலும் மாநாட்டின் ஏற்பாடுகள் நின்று போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. சம்பவ இடத்தில் இருப்பதாலும் , மேசமான நிலைகள் காரணமாகவும் இறுதியில் நம்மீதும் சில பொறுப்புகள் உள்ளன, நல்லதாக இறைவன் செய்யவைப்பதை செய்வோம் , இன்- அல்லாஹ். நன்றாக சிந்தித்து, ஆலோசனைகள் செய்து, மேல்கீழ் ஏற்றயிரக்கம் பார்த்தபின் இறுதியில் இரண்டாவது அல்லது முன்றாவது இரவின் இருளில் சில அறியாத இடங்களில் சில பிரசுரங்கள் ஒட்டப்பட்டன, அவை இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுதான் ஏனெனில் அறியப்படாத இடமாக மட்டுமில்லாது உயர்வான இடத்தில் பிரசுரம் ஒட்டப்பட்டது முதலில் அதனை யாரும் பார்க்வே முடியாது பார்த்துவிட்டாலும் படிக்கமுடியாது.

குறிப்பு:- ஹஸ்ரத் முன்ஷி ஜலாலுத்தீன் சாஹிப் பலாநவி மற்றும் ஹஸ்ரத் பீர் ஜீ சிராஜுல் ஹக் சாஹிப் நுஃமானீ (ரலீ) ஆகிய இரு மகான்களின் கையால் எழுதி பிரதி எடுக்கப்பட்டு இந்த மாநாட்டில் ஹஸ்ரத் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களால் வாசிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த கட்டுரை இன்று வரை என்னிடம் பாதுகாப்பாக உள்ளது. ஆயினும் இந்த விலை மதிப்புமிக்க தூய அமானத்தை பாதுகாக்கும் உரிமையை செலுத்த முடியாதவனாக இருப்பதால், இதனை சமுதாய அமானத்தாக கருதி, நிறுவப்பட உள்ள சமுதாய மியூஸியத்தில் வைத்து எதிர்கால சந்ததிகளின் ஈமான், நம்பிக்கை உறுதியடைந்து அதிகரிக்க மேலும் இறைஞானம் வளர்ச்சியடைய காரணமாக வேண்டும் என்பதற்காக சையிதுனா கமருல் அன்பியா ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சல்லமஹு அவர்களிடம் ஒப்படைக்கிறேன். அவர்கள் இவ்வாறான பணிகளுக்கு தகுதியும்,உரிமையும் உடையவர் ஆவார்கள்.

இப்படிக்கு - அப்துர் ரஹ்மான் காதியானி

……☆……☆……☆……

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் காஃபிர் அல்லன். லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி வலாகின் ரஸூலல்லாஹி வகாத்தமன் நபிய்யீன் (ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கு முத்திரையாகவும் இருக்கிறார்) என்பதன் மீது எனக்கு ஈமான் இருக்கிறது. (கராமாத்துஸ் ஸாதிகீன் 25 ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)

M.Y. Shahul Hameed, Melapalayam

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் – எதிரிகளின் அழிவின் ஒளியில்

(தமிழாக்கம்: முஅல்லிம் M.முஸம்மில்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஹகீகதுல் வஹி ரூகானனி கஸாயின் பாகம் 22 இல் இருந்து அன்னாரின் இரண்டு எதிரிகளின் பரிதாபத்திற்குரிய முடிவு முன்வைக்கப்படுகின்றது. இந்த இரண்டு எதிரிகளும் அன்னாரின் முன்னறிவிப்பிற்கேற்ப அழிவை சந்தித்தனர். அவர்களின் அழிவும் பரிதாபமான முடிவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு மாபெரும் சான்றாக விளங்குகின்றன.

**ஒளிவீசும் அடையாளம் - லாஹூர் ஓய்வூதிய கணக்கர் பொய் மூஸா பாபு இலாஹி பக்ஷ் இறந்து விட்டார்**

லாஹூர் கணக்கர் முன்ஷி இலாஹி பக்ஷ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சீடர்களில் ஒருவராக இருந்தார். பற்று மற்றும் விசுவாசத்தில் மிகவும் முன்னேறியவாராக இருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1889 இல் பைஅத்தின் மூலமாக ஜமாஅத்தை நிறுவினார்கள். அப்போது தமது சீடர்களிடம் பைஅத்தில் இணையுமாறு கூறியபோது திடீரென இலாஹி பக்ஷ் தடம் புரண்டு விட்டார். அவர் காதியான் வந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் தகாத முறையில் தனது கனவுகள் மற்றும் இறையறிவிப்புகளை கூறினார். மேலும் கூறினார், ஒரு கனவில் நான் உங்களிடம், நான் ஏன் உங்களிடம் பைஅத் செய்ய வேண்டும்? நீங்கள் என்னிடம் பைஅத் செய்யுங்கள் என்று கூறினேன் என்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது இந்த பழைய நண்பரை அழிவிற்குள்ளாவதிலிருந்து பாதுகாக்க மகத்துவமிக்க இமாமின் தேவை எனும் நூலை இயற்றினார்கள். அதில் அனைத்து விதத்திலும் அவருக்கு புரிய வைக்க முயன்றார்கள். அன்னார் பைஅத் மற்றும் இறையறிவிப்பின் உண்மை நிலை பற்றியும் ஆழிய ஞானமிக்க ரீதியில் விவரித்தார்கள். அந்த நூலில் இருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒருசில மேற்கோள்கள் இதோ முன்வைக்கப்படுகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இலாஹி பக்ஷிடம் கூறினார்கள்:

மதிப்பிற்குரியவரே! நாம், ஞானங்கள், சத்தியங்கள் மற்றும் வானத்தின் அருள்களின் தாகமும் பசியும் கொண்டவராக இருக்கின்றோம். ஒரு கடல் முழுவதையும் குடித்தாலும் நிறையாததாக உள்ளது. எனவே எம்மை எவராவது தனது அடிமையாக எடுத்துக்கொள்ள விரும்பினால் இது மிகவும் எளிதான வழிமுறையாக இருக்கும். அதாவது பைஅத்தின் வாசகம் மற்றும் அதன் அசல் தத்துவத்தை மனதில் இருத்திக் கொண்டு இந்த கொடுக்கல் வாங்கலை எம்மிடம் செய்து கொள்ளலாம்.

அவரிடம் இப்படிப்பட்ட ஆழிய கருத்துக்கள், ஞானங்கள் மற்றும் வானத்தின் அருள்கள் நமக்கு வழங்கப்படாதது இருக்குமென்றால் அல்லது நம்மீது திறக்கப்படாத அந்த திருக்குர்ஆனின் ஞானம் அவர்மீது திறந்துள்ளது என்றால் பிஸ்மில்லாஹ் என அந் பெரியவர் நமது அடிமைத்துவம் மற்றும் கட்டுப்படுதலுக்கான கையைப் பெற்றுக் கொள்ளட்டும். அந்த ஆன்மீக ஞானங்கள், திருக்குர்ஆனின் ஆழிய கருத்துக்கள் மற்றும் வானத்தின் அருள்களை நமக்கு தரட்டும். நான் அதிக கஷ்டத்தைத்தர விரும்பவில்லை. நமது அன்பிற்குரிய நண்பர் ஏதேனும் ஒரு மாநாட்டில் அக்லாஸ் அதிகாரத்தின் ஆழிய ஞானங்களைக் கூறட்டும். அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக நம்மால் கூற முடியவில்லையென்றால் நாம் அவரின் சீடராகி விடுவோம்.

(ரூஹானி கஸாயின் பாகம் 13 பக்கம் 498) — (ஸரூரத்துல் இமாம் ரூகானி கஸாயின் பாகம் 13 பக்கம் 498)

அன்னார் கூறினார்கள்: நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன், எந்தளவிற்கு நமது நண்பர் மவ்லவி அறிஞர் அப்துல் கரீம் சாஹிப், சொற்பொழிவின் போது திருக்குர்ஆனின் ஆழிய ஞானங்களை கூறுவார்களோ அவற்றின் ஆயிரமாம் பகுதியைக்கூட எனது மதிப்பிற்குரிய (அந்த) நண்பரின் வாயிலிருந்து வெளிப்படும் என்ற நம்பிக்கை ஒருபோதும் இல்லை.

(ஸரூரத்துல் இமாம் ரூகானி கஸாயின் பாகம் 13 பக்கம் 498)

அன்னார் கூறினார்கள்: நமது ஜமாஅத்தில் என்னிடம் பைஅத் செய்துள்ள இறையடியார்களில் ஒரு ஆண் இருக்கின்றார். அவர் மாபெரும் அறிஞராவார். அவர் மவ்லவி ஹகீம் ஹாஃபிஸ் ஹாஜியுல் ஹரமைன் நூருத்தீன் சாஹிப் ஆகும். அவர் அனைத்து உலகின் விரிவுரைகளையும் தம்மிடம் வைத்திருக்கின்றார். இவ்வாறே அவரின் உள்ளத்தில் ஆயிரக்கணக்கான திருக்குர்ஆன் ஞானங்களின் குவியலை வைத்திருக்கின்றார். உங்களுக்கு உண்மையிலேயே பைஅத் பெற்றுக் கொள்வதற்கான சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் திருக்குர்ஆனின் ஒரு பாராவின் ஆழிய ஞானங்களை அவரிடம் படித்துக் காட்டுங்கள். என்னிடம் பைஅத் செய்துவிட்டு ஏனைய ஞானிகளை விட்டுவிட்ட இந்த மக்கள் பைத்தியக்காரர்கள் ஒன்றும் இல்லை. (ஸரூரத்துல் இமாம் ரூகானி கஸாயின் பாகம் 13 பக்கம் 500)

அன்னார் கூறுகின்றார்கள்: அவர் தனது இறையறிவிப்பின் சக்தியால் முதலில் குறிப்பிட்ட மவ்லவி சாஹிபிடம் திருக்குர்ஆனின் மேதை என்பதற்கான உதாரணத்தை காண்பிக்கட்டும். அந்த அசாதாரண உதாரணத்தால் நூருத்தீனைப் போன்ற திருக்குர்ஆன் நேசரிடம் பைஅத் பெறட்டும். பிறகு நானும் எனது மொத்த ஜமாஅத்தும் தாங்களிடம் அர்ப்பணமாகி விடுகின்றோம்.

(ஸரூரத்துல் இமாம் ரூகானி கஸாயின் பாகம் 13 பக்கம் 501)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒளிவீசும் அடையாளம், லாஹூர் ஓய்வூதிய கணக்கர், பொய் மூஸா, பாபு இலாஹி பக்ஷ் இறந்து விட்டார் எனும் தலைப்பில் ஜமாஅத்திற்கு அவரின் அழிவைப் பற்றிய செய்தியை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

பார்வையாளர்களே! உங்களுக்குத் தெரிந்திருக்கும், இலாஹி பக்ஷ் எனும் பெயரைக் கொண்ட ஒரு நபர் லாஹூரில் கணக்கராக இருந்தார். அவர், நான் இறைவனிடம் இறையறிவிப்பைப் பெற்று, நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் எனும் வி-யத்தை வெளிப்படுத்திய காலத்தில் என்னிடமிருந்து விலகி, நான் மூஸா ஆவேன் எனும் வாதியாக ஆகினார். அந்த வி-யத்தின் விளக்கம் இதுவாகும்,நீண்ட காலமாக அந்த இலாஹி பக்ஷ் என்னுடன் தொடர்பு வைத்து வந்தார். எண்ணற்ற முறை காதியான் வந்துகொண்டு இருந்தார். என்னை இறைவன் புறமிருந்துள்ள ஒரு உண்மையான இறைஞானியாக அறிந்திருந்தார். சேவையாற்றி வந்தார். சில சமயங்களில் இப்படிப்பட்ட எதேச்சையான நிகழ்வுகளும் நடந்துள்ளது. அதாவது காலை வேளையில் தொழுகைக்குப் பிறகு அம்ரித்ஸரில் உறங்கிக் கொண்டிருந்தேன். எனது முகத்தில் போர்வை இருந்தது. அப்போது ஒரு நபர் வந்தார். அவர் எனது கால்களை அமுக்கிவிடத் தொடங்கி விட்டார். நான் போர்வையை விலக்கிப் பார்த்தபோது அதே இலாஹி பக்-ாக இருந்தார். இதனை எழுதுவதன் நோக்கம், அந்தளவிற்கு அவரது நன்நடத்தை எட்டி இருந்தது. எந்த மனிதருக்கும் சேவையாற்றுவதிலிருந்து அவர் கை விரிப்பவராகவும் தயங்குபவராகவும் இருக்க வில்லை. மிகவும் பணிவுடன் சாதாரண பணியாளர்களைப் போன்று தன்னை கருதி வந்தார். பொருள் தியாகத்திலும் முடிந்தவரை தன்னை ஈடுபடுத்தி வந்தார். இறைவன் நாடியவரை அவர் இதே குறிப்பிட்ட நிலையில் இருந்து வந்தார். அவர் தனது நன்நடத்தையில் பெரும் முன்னேற்றம் அடைவார் என எனக்கு பெரும் நம்பிக்கை இருந்தது.

நான் காதியானிலிருந்து ஏதேனும் நிகழ்ச்சிக்காக லூதியானா அல்லது அம்பாலா அல்லது வேறு ஏதேனும் இடத்திற்கு சென்றாலும் வாய்ப்பு மற்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த இடத்திற்கே வந்து விடுவார். அதிகமான நேரங்களில் அவருடைய நண்பர் முன்ஷி அப்துல் ஹக் கணக்கரும் அவருடன் இருப்பார். அடுத்து அவருக்கு சிறிது

காலத்திற்குப் பிறகு எனக்கு இறையறிவிப்பு வருகிறது எனும் எண்ணம் தோன்றியது. இதுதான் விதி அவருக்குள் புதைத்த ஒரு வி- விதையாக இருந்தது. அடுத்து அதற்குப் பிறகு உள்ளுக்குள்ளேயே அவரின் குறிப்பிட்ட நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே சென்றது. பிறகு இறைவன் என்னிடம் மக்களிடமிருந்து பைஅத் பெறுவதற்காக நியமித்த அந்த காலத்தில் ஏறக்குறைய நாற்பது நபர்கள் அல்லது சிறிது அதிகமாகனவர்கள் பைஅத்தில் நுழைந்தார்கள். பொதுவாகவும் இறைக் கட்டளைக்கு ஏற்பவும், விரும்புபவர்கள் பைஅத்தில் இணையலாம் என ஒவ்வொருவருக்கும் அறிவித்தேன். அப்போது இவ்வி-யத்தைக் கேட்டதுமே இலாஹி பக்ஷின் உள்ளம் புரண்டு விட்டது. அவர் சிறிது காலத்திற்குப் பிறகு தனது நண்பர் முன்ஷி அப்துல் ஹக்குடன் காதியானிற்கு என்னிடம் தனது இறையறிவிப்பை கூறும் நோக்கில் வந்தார்.

இந்த முறை அவரது இயல்பு, அவர் இலாஹி பக்ஷ் இல்லை; வேறு நபராவார் என எண்ணும் அளவிற்கு கடினமாகியிருந்தது. அவர் தகாத முறையில் தனது இறையறிவிப்பை கூறத் தொடங்கினார். அது ஒரு சிறிய காகிதத்தில் எழுதப்பட்டு அவரது சட்டைப் பையில் இருந்தது. அவரது சொற்களில் அவர் கூறினார், கனவில் நான் பார்த்தேன், என்னிடம் பைஅத் செய்யுங்கள் என தாங்கள் என்னிடம் கூறுகின்றீர்கள். நான் செய்ய மாட்டேன், மாறாக நீங்கள் என்னிடம் செய்யுங்கள் என நான் பதிலளித்தேன்.

அந்த கனவின் காரணமாக அவர் தலை முதல் கால்வரை ஆணவத்தாலும் வெறுப்புணர்வாலும் நிறைந்து காணப்பட்டார். மேலும் நான் எப்படிப்பட்ட பெரியவன் என்றால் எனக்கு பைஅத்தின் தேவை இல்லை மாறாக அவர் என்னிடம் பைஅத் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் அவரின் தடுமாற்றத்திற்கு காரணமாகிய இது உண்மையில் ஒரு ெ-ய்த்தானிய ஊசலாட்டமாக இருந்தது. வி-யம் என்னவென்றால் மனிதனின் உள்ளத்தில் ஆணவமும் நிராகரிப்பும் மறைவானதாக இருக்கின்றபோது அதே நிராகரிப்பு ஆழ்மனதின் குரலைப் போன்று கனவில் வருகின்றது. ஒரு அறிவற்றன் இதனை இறைவன் புறமிருந்து வந்ததாக கருதுகின்றான். ஆனால் அந்த நிராகரிப்பு முற்றிலும் தனது மறைவான எண்ணங்களினால் பிறக்கின்றது. இறைவனுடன் அதற்கு எந்தத் தொடர்பும் இருப்பதில்லை.

எனவே நூற்றுக்கணக்கான வழிகேடர்கள் இந்த ஆழ்மனதின் குரலாலேயே அழிவிற்குள்ளாகி விடுகின்றனர். எவ்வாறிருப்பினும் இலாஹி பக்ஷ் பெரும் அகங்காரத்துடனும் தகாத முறையிலும் அந்த கனவை எனக்குக் கூறினார். எனக்கு அவரது அறிவீனத்தின் மீது பரிதாபம் ஏற்படுகின்றது. ஏனென்றால் அவர் என்னிடம் எதனைக் கூறுகின்றாரோ அது வெறும் ஆழ்மனதின் குரலாகும் என்பது எனக்கு உறுதியாகத் தெரிந்திருந்தது.

நான் அவரது உள்ளதில் ஆணவத்தை உணர்ந்தேன். புனைதல் மற்றும் இட்டுக்கட்டின் அடையாளத்தைப் பார்த்தேன். அவரது பேச்சில் வேகம் இருந்தது. எனவே நான் அவருக்கு சிறிது அறிவுரைக் கூறுவதை பயனற்றதாக் கருதினேன். இது பரிதாபத்திற்குரிய இடமாகும். அதாவது அதிகமான மக்கள் தெளிவற்ற நிலையில் அவர்களின் வாயிலிருந்து வெளிவருவதை இறையறிவிப்பாக எண்ணிக் கொள்கின்றார்கள். இந்த இறைவசனத்தின் (உங்களுக்கு அறிவில்லாததைப் பற்றி பேசாதீர்கள்) கீழ் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள். நினைவில் வைத்துக் கொள்ளவேண்டியது என்னவேன்றால் ஒரு சொல் நாவிலிருந்து வெளிப்பட்டு அது அல்லாஹ்வின் கூற்று மற்றும் ரசூலின் கூற்றிற்கு எதிராக இல்லாமல் இருந்தாலும்கூட இறைவனின் செயல் அதன் மீது சாட்சி பகராதவரை அது இறையறிவிப்பாக கூறப்படாது. ஏனென்றால் மனிதனின் எதிரியாகிய சபிக்கப்பட்ட ெ-ய்த்தான் எவ்வாறான வழிகளில் எல்லாம் மனிதனை அழிக்க விரும்புகின்றானோ அவ்வாறே வழிகெடுப்பவனின் ஒரு வழிமுறை இதுவாகவும் இருக்கின்றது. அதாவது தனது சொற்களை மனிதனின் உள்ளத்தில் போட்டுவிட்டு அது இறைவனின் சொற்களாகும் என்ற உறுதியையும் ஏற்படுத்துகின்றான். இப்படிப்பட்ட மனிதரின் இறுதி முடிவு அழிவாகி விடுகின்றது. எனவே ஒருவர்மீது ஏதேனும் இறையறிவிப்பு இறங்கினால் அதில் மூன்று அடையாளங்கள் காணப்படாதவரை அதனை இறையறிவிப்பாக கூறுவது தன்னைத் தானே அழிவில் போட்டுக்கொள்வதாகும்.

ஒன்று - அந்த கூற்று திருக்குர்ஆனிற்கு எதிராகவும் முரணாகவும் இருக்க வேண்டும். இருப்பினும் இந்த அடையாளம், இதில் குறிப்பிடப்படவிருக்கும் மூன்றாவது அடையாளமின்றி முழுமையடையாது. இன்னும் சொல்லப்போனால் மூன்றாவது அடையாளம் இல்லையென்றால் இந்த அடையாளாத்தால் மட்டுமே எதுவும் நிருபணமாகாது.

இரண்டு - அந்த கூற்று, எவரின் ஆன்மா மிக நன்றாக பரிசுத்தப்படுத்தப்படிக்குமோ அப்படிப்பட்டவரின் உள்ளத்தில் இறங்கும். அவர் முற்றிலும் மன கிளர்ச்சிகளிலிருந்து தனியாகிவிட்ட அந்த அர்ப்பணமாகிவிடும் கூட்டத்தைச் சார்ந்தவராக இருப்பார். அவர்களின் ஆன்மாவின் மீது எப்படிப்படிப்பட்ட மரணம் வந்துவிடுகிறது என்றால் அதன் மூலமாக அவர்கள் இறைவனுக்கு நெருக்கமாகவும் ெ-ய்தானை விட்டு தூரமாகவும் இருக்கின்றனர். ஏனெனில் எந்த மனிதர் எவருடைய அருகாமையில் இருப்பாரோ அவரின் சத்தத்தையே கேட்கின்றார். எனவே எவர் ெ-ய்த்தானின் அருகில் இருப்பாரோ அவர் ெ-ய்த்தானின் சத்தத்தைக் கேட்கின்றார். எவர் இறைவனுக்கு அருகில் இருப்பாரோ அவர் இறைவனின் சத்தத்தைக் கேட்கிறார். மனிதனின் உச்சபட்ச முயற்சி என்பது ஆன்மாவை பரிசுத்தப்படுத்துதலாகும். அத்துடன் அனைத்து செயல்பாடுகளும் முடிவடைந்து விடுகின்றது.

வேறு சொற்களில் கூறினால் இது ஒரு மரணமாகும். அது அனைத்து உட்படையான ஆசைகளையும் எரித்து விடுகின்றது. பிறகு மனிதன் தனது அனைத்து செயல்பாடுகளையும் முடித்துவிட்ட பின் இறைவன் தரப்பிலிருந்து மாற்றம் நிகழ்கிறது. அப்போது இறைவன், அழிக்கப்பட்ட மன கிளர்ச்சிகளின் நிலை அர்ப்பணிப்பின் தரம்வரை எட்டிவிட்டிருந்த தனது அந்த அடியாரை இறைஞானம் மற்றும் நேசம் எனும் வாழ்வால் மீண்டும் உயிரிப்பிக்கின்றான். தனது அசாதாரண அடையாளங்களால் ஆன்மீக அற்புதங்களில் அவரை பயணிக்க வைக்கின்றான். தனது அன்பின் அடுத்தடுத்த நிலைகளை அவரின் உள்ளத்தில் நிறைத்து விடுகின்றான். அதனை உலகத்தால் புரிந்து கொள்ள முடியாது. இந்த நிலையில், அவருக்கு புதிய வாழ்க்கை கிடைத்து விட்டது, இதன் பிறகு மரணம் இல்லை என்று கூறமுடியும்.

எனவே இந்த புதிய வாழ்க்கை முழுமையான இறைஞானம் மற்றும் முழுமையான அன்பினால் கிடைக்கின்றது. முழுமையான இறைஞானம் இறைவனின் அசாதாரண அடையாளங்களினால் கிடைக்கின்றது. மேலும் எப்போது மனிதன் அந்த எல்லையை அடைந்து விடுகின்றானோ அப்போது அவருக்கு இறைவனின் உண்மையான இறையறிவிப்பிற்கான பாக்கியம் கிடைக்கின்றது. ஆனால் இந்த இரண்டாவது அடையாளமும் மூன்றாவது தகுதியைக் கொண்ட அடையாளமின்றி மனநிறைவைத் தராது. ஏனென்றால் முழுமையான பரிசுத்தம் என்பது ஒரு மறைவான வி-யமாகும். எனவே எந்த ஒரு வீணாணவராலும் இப்படிப்பட்ட வாதத்தை செய்ய முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

எவர் பொறுமையுடனும் உண்மையான உள்ளத்துடனும் எனக்குப் பின்னால் வருவாரோ அவர் அழிக்கப்பட மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மாறாக, அவர் என்றும் அழியாத அந்த வாழ்க்கையின் பங்கைப் பெறுவார். அதாவது இவ்வுலகிலும் அவர் அருட்கொடையைப் பெறுவார். மறுமை வாழ்க்கையிலும் அல்லாஹ் அவர்களுக்கு அருட்கொடைகளை வழங்குவான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 30–31; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

Faizal Hameed Ilahi, Tittacherry

உண்மையான இறையடியாரின் மூன்றாவது அடையாளம் என்னவென்றால் எந்த கூற்றை அவர் இறைவன் அருளியதாக கூறுவாரோ அதனை இறைவனின் தொடர்ச்சியான செயல்கள் சாட்சி பகர வேண்டும். அதாவது இந்த அளவிற்கு அடையாளங்கள் வெளிப்பட்ட பிறகும் அது இறையறிவிப்பு இல்லை எனும் வி-யத்தை அறிவு மறுக்காத அளவிற்கு அதற்கு ஆதரவாக அடையாளங்கள் வெளிப்பட வேண்டும். இந்த அடையாளம் உண்மையில் அனைத்து அடையாளங்களையும் தாண்டியதாக இருக்கின்றது. ஏனென்றால் ஒரு கூற்று எவருடைய வாயிலிருந்து வெளிவந்தால் அல்லது எவராவது இறையறிவிப்பின் அறிவிப்பை முன்வைத்தால் அது தனது பொருள்களின் அடிப்படையில் திருக்குர்ஆனின் கூற்றிற்கு மாறுபடாமல் ஏற்றதாக இருந்தாலும்கூட அது ஒரு பொய் புனைபவரின் புனைவாகவும் இருக்க வாய்ப்பு உள்ளது.

காரணம், ஒரு முஸ்லிம் அறிவாளியாக இருக்கின்றார். ஆனால் பொய் புனைபவராக இருக்கின்றார், திருக்குர்ஆனிற்கு எதிராக எந்தக் கூற்றும் இறையறிவிப்பு வாதமாக இல்லாமல் நிச்சயமாக அவரால் பார்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு இல்லையென்றால் மக்களின் ஆட்சேபனைக்கு இலக்காகி விடுவார். மேலும் அக்கூற்று ஆழ்மனதின் குரலாகவும் இருக்க வாய்ப்புண்டு. அதாவது ஆன்மாவின் தரப்பிலிருந்து ஒரு வார்த்தை வெளிவந்திருக்கலாம். எவ்வாறெனில் அதிகமான குழந்தைகள் பகலில் புத்தகங்களைப் படிக்கின்றார்கள். இரவில் சில சமயங்களில் அதே வார்த்தைகள் அவர்களின் வாயிலிருந்து வெளிவர ஆரம்பித்து விடுகின்றது. எனவே இறையறிவிப்பு வாதமாக முன்வைக்கப்படும் ஏதேனும் வார்த்தை திருக்குர்ஆனிற்கு ஏற்ப இருப்பது அது நிச்சயம் இறைவார்த்தையாகும் என்பதற்கான உறுதியான சான்று கிடையாது.

ஒரு கூற்று தனது பொருள்களின் அடிப்படையில் இறைவேதத்திற்கு எதிராக இல்லாமல் இருந்து பின்பு அது ஒரு பொய் புனைபவரின் புனைவாகவும் இருக்க வாய்ப்பு இல்லையா? ஏனென்றால் ஒரு பொய் புனைபவரால் மிக எளிதாக இந்த ஏற்பாட்டைச் செய்துவிட முடியும். அதாவது அவர் திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப ஒரு கூற்றை முன்வைத்து, இது என்மீது இறங்கிய இறைவனின் கூற்றாகும் எனக் கூற முடியும். அல்லது இப்படிப்பட்ட கூற்று ஆழ்மனதின் குரலாகவும் இருக்கலாம். அல்லது ௌ-ய்த்தானின் கூற்றாகவும் இருக்கலாம்.

இவ்வாறே இந்த இரண்டாவது நிபந்தனையும் அதாவது இறையறிவிப்பின் வாதம் புரிபவர் பரிசுத்த ஆன்மாவைக் கொண்டவர் என்பது மன நிறைவைத் தராது. மாறாக அது ஒரு மறைவான வி-யமாகும். நிறைய அசுத்த இயல்பைக் கொண்டவர்கள், எங்களின் ஆன்மா பரிசுத்தமானதாகும், நாங்கள் இறைவனுடன் உண்மையான அன்பு வைத்துள்ளோம் எனும் வாதம் செய்ய முடியும். எனவே இந்த வி-யமும் விரைவாக உண்மையாளரும் பொய்யரும் பிரித்தறியப்படும் ஒரு எளிதான வி-யம் இல்லை. இதன் காரணமாக பல அசுத்த ஆன்மாவைக் கொண்டவர்கள் பரிசுத்த ஆன்மாவைக் கொண்ட அந்த பெரியோர்களின் மீது அசுத்த அவதூறுகளை சுமத்தினார்கள்.

எவ்வாறெனில் இன்றைய பாதிரியார்கள் நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது அவதூறுகளை சுமத்துகின்றனர். நவூதுபில்லாஹ் அன்னார் மன இச்சையைப் பின்பற்றினார்கள் என்று அவர்களின் ஆயிரக்கணக்கான பத்திக்கைகள், நாளேடுகள் மற்றும் புத்தகங்களில் இவ்வாறான அவதூறுகளைக் காண்பீர்கள். இவ்வாறே யூதர்கள் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் மீதும் விதவிதமான அவதூறுகளைச் சுமத்துகின்றனர்.

சில நாட்கள் கடந்திருக்கும். நான் ஒரு யூதரின் நூலைப் படித்தேன். அதில் நவூது பில்லாஹ் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் பிறப்பு முறையற்றதாக இருந்தது எனும் அசுத்தமான ஆட்சேபனை இருந்தது மட்டுமின்றி அன்னாரின் நடத்தைமீதும் மிகவும் அசுத்தமான ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தது. அன்னாருக்கு சேவையாற்ற சில பெண்கள் இருந்தனர். அவர்களை மிகவும் தீயமுறையில் சித்தரித்து குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே கீழ்தரமான இயல்புடைய எதிரிகள் இப்படிப்பட்ட தூய இயல்புடைய பரிசுத்தமான மக்களை இச்சையை பின்பற்றுபவர்களாக கூறுகின்றனர். மனத் தூய்மையில் இருந்து காலியாக இருப்பதாக விளங்கிக் கொள்வது என்பதிலிருந்து மனத் தூய்மையின் வி-யத்தை எதிரிகளின் மீது வெளிப்படுத்திக் காட்டுவது எந்தளவிற்கு கடினமானகும் என்பதை ஒவ்வொருவரு மனிதரும் தெரிந்து கொள்ள முடியும். ஆரிய மக்கள் இறைவனின் அனைத்து நபிமார்களையும் மாறுவேடம் தரிப்பவர்களாகவும் இச்சை வாதிகளாகவும் மட்டுமே காட்டுகின்றனர். அவர்களின் வாழ்க்கையை ஏமாற்றுதல் மற்றும் பித்தலாட்ட வாழ்க்கையாக முன்வைக்கின்றனர்.

ஆனால் இந்த மூன்றாவது அடையாளம் அதாவது ஒரு கூற்றாக இருக்கும் இல்ஹாம் மற்றும் வஹீயுடன் இறைவனின் ஒரு செயலும் இருக்க வேண்டும். இது எப்படிப்பட்ட முழுமையான அடையாளம் என்றால் இதனை எவராலும் உடைக்க முடியாது. இந்த அடையாளத்தின் மூலமாகவே இறைவனின் உண்மையான நபிமார்கள் பொய்யர்களின் மீது வெற்றி பெறுகின்றார்கள். ஏனென்றால் ஒரு மனிதர் என்மீது இறைவசனம் இறங்குகின்றது என வாதம் செய்கின்றார். அத்துடன் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் வெளிப்படகின்றன. ஆயிரக்காணக்கான வகை உதவிகளும் இறை ஒத்தாசைகளும் இணைந்திருக்கின்றது.

அவரது எதிரிகளின் மீது இறைவனின் வெளிப்படையான தாக்குதல்கள் நடக்கின்றன எனும்போது இப்படிப்பட்ட மனிதரை பொய்யர் என்று கூறு எவருக்கு துணிவு உள்ளது?. ஆனால் பரிதாபம்! உலகில் அதிகமான மக்கள் இந்த சோதனையில் சிக்கிக்கொள்பவர்களாக இருக்கின்றனர். அதாவது ஏற்படும் ஏதேனும் ஆழ்மனதின் குரலை அல்லது ௌ-ய்தானிய ஊசலாட்டத்தை இறைவனின் கூற்றாகப் புரிந்து கொள்கின்றனர். செயல் ரீதியிலான சான்றின் தேவையை சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

ஆம், எவருக்காவது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதேனும் உண்மையான கனவும் அல்லது உண்மையான இறையறிவிப்பும் வர சாத்தியமுள்ளது. ஆனால் அவர் இதன் காரணமாக மட்டுமே இறைவனால் அனுப்பப்பட்டவராக அழைக்கப்படமாட்டார். மேலும் அவர் மனத்தின் இருள்களிலிருந்து தூய்மையானவர் என்றும் கூறிவிட முடியாது.

மாறாக இவ்வகையான கனவுகள் மற்றும் இறையறிவிப்புகளில் ஏறக்குறைய ஒட்டுமொத்த உலகமும் பங்கு பெற்றுள்ளது. இது சற்றும் ஒரு பொருளே இல்லை. இந்தத் தன்மை சில நேரங்களில் கனவு அல்லது இறையறிவிப்பு வருவது என்பது எதற்காக மனிதனின் இயல்பில் வைக்கப்பட்டுள்ளது என்றால் இதன் மூலமாக ஒரு அறிவுபடைத்த ஒரு மனிதன் இறைவனின் மதிப்பிற்குரிய தூதர்களின் மீது தப்பெண்ணம் கொள்ள முடியாமல் ஆகிவிடும். மேலும் வஹி மற்றும் இல்ஹாம் பெறுவது ஒவ்வொரு மனிதரின் இயல்பிலும் விதைக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளவுமாகும். பிறகு அவரின் முழுமையான முன்னேற்றத்தை மறுப்பது என்பது முட்டாள்தனமாகி விடுகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

பாருங்கள். நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். என்னை மெய்ப்பிக்கின்ற வகையிலுள்ள ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வருங்காலத்திலும் அவை வெளிப்படும் (அவை நின்றுவிடவில்லை). வருங்காலத்திலும் அவை வெளிப்படும். இது மனிதனின் திட்டமாக இருந்திருந்தால் அதற்கு இந்த அளவு ஆதரவும் உதவியும் ஒருபோதும் கிடைத்திருக்காது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 48)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

ஆனால் எவர்கள் இறைவனின் பார்வையில் இறையறிவிப்பைப் பெறுவர்களாகவும் இறைவனுடன் பேசுபவர்களாகவும் அழைக்கப்படுகின்றார்களோ, இறையறிவிப்பின் பாக்கியத்தைக் கொண்டிருக்கின்றார்களோ மேலும் மக்களின் நேர்வழிக்காக தோன்றுகின்றனரோ அவர்களுக்கு ஆதரவாக இறைவனின் அடையாளங்கள் மழையைப் போன்று பொழிகின்றது. உலகத்தால் அவர்களை எதிர்த்து நிற்க முடியாது. இறைவனின் செயல் தனது பெரும்பான்மையின் வாயிலாக எந்த கூற்றை அவர் முன்வைக்கின்றாரோ அது இறைவனின் கூற்றாகும் என்று சான்று பகர்கின்றது. இறையறிவிப்பு கிடைப்பதாக வாதம் செய்பவர் இந்த அடையாளத்தை கவனத்தில் வைத்துக்கொண்டால் அவர் இக்குழப்பத்தலிருந்து தவிர்ந்து கொள்வார்.

இதேபோன்று இலாஹி பக்ஷ் இவ்வி-யத்தில் அதாவது அவருக்கு ஆதரவாக இறைவனின் அடையாளங்கள் எந்தளவிற்கு வெளிப்பட்டுள்ளது, எந்தளவிற்கு அவருக்கு ஆதரவும் உதவியும் கிடைத்துள்ளது, சாதாரண மக்களைப் பொறுத்தவரை அவருக்கு என்ன தனித்தன்மை வழங்கப்பட்டுள்ளது என சிறிது சிந்தித்திருந்தால் அவர் இந்த சோதனையில் சிக்கியிருக்க மாட்டார். இப்போது மிகவும் வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது, அவர் தனது மரணத்திற்குப் பிறகு ஒரு பொய் மூட்டையையும் இட்டுக்கட்டையும் விட்டுச் சென்றுள்ளார். என் தொடர்பாக அவர், என் வாழ்நாளில் இந்த மனிதர் பிளேக்கினால் அழிந்து விடுவார். அவரது அனைத்து ஜமாஅத்தும் சிதறுண்டு விடும் எனும் இந்த இறையறிவிப்பை முன்வைத்து வந்தார்.

எனவே அவர் சுயம் பிளேக்கினால் அழிந்ததை கண்டுகொண்டார். அவர் என்னை வேரோடு பிடுங்காதவரை மரணிக்க மாட்டார் என்பது அவரின் வாதமாக இருந்தது. ஆனால் அவரது பொய்யான இறையறிவிப்பிற்குப் பிறகு பல இலட்சம் வரை எனது ஜமாஅத் எட்டிவிட்டதை அவர் கண்கூடாகக் கண்டுவிட்டார். இப்படிப்பட்ட இறையறிவிப்பை அவர் வெளியிடத் தொடங்கியிருந்த நேரத்தில் எனது ஜமாஅத் நாற்பது நபர்களைவிட அதிகமாக இருக்கவில்லை. பிறகு நான்கு இலட்சத்தை எட்டி விட்டது. அவர் தனது தோல்வியை எல்லா கோணத்திலும் காணாதவரையிலும் மேலும் எனது வெற்றியைக் காணாத வரையிலும் மரணிக்கவில்லை. அவர் தனது பொய்யான இறையறிவிப்பின் மூலமாக அவர் என்மீது தொடுத்திருந்த ஒவ்வொரு வழக்கிலும் நான் தண்டனைப் பெற்று கடும் ஆக்கினையில் சிக்கிக் கொள்வேன் என்று எண்ணினார்.

அவ்வாறே அவர் இறையறிவிப்பு இறங்கிய உடன் அவற்றை தனது நண்பர்களிடம் வெளியிட்டு வந்தார். ஆனால் இறைவன் ஒவ்வொரு வழக்கிலும் கண்ணியத்ததுடன் என்னை விடுதலை செய்து வந்தான். பெரும் தோல்வியுடன் அவருக்கு மரணம் ஏற்பட்டது. அவருக்கு பிளேக் நோய் வந்தபோது மரணத்தை அவர் தனது முன்னால் கண்டுவிட்டார். அப்போது அவர் தனது அனைத்து இறையறிவிப்புகளும் ெ-ய்த்தானிய கூற்றாக புரிந்திருப்பார். அந்நேரம் அவருக்கு தன்னைப் பற்றி, நான் தவற்றில் இருந்தேன் என்பது நினைவிற்கு வந்திருக்கும்.

இவ்வி-யம் அதாவது அவர் இந்தளவிற்கு தடுக்கி விழுந்தும் மேலும் என்தொடர்பாக குறிப்பிட்ட அந்த பிளேக்கில் தான் சிக்கியதைக் கண்டும், எனது வெற்றிகளைப் பற்றி தனது இறுதிவரை மூச்சுவரை சிந்தித்தப் பிறகும் அவர் தனது முந்தைய நிலையில்தான் இருந்தார் என்பது முற்றிலும் அறிவுக்கு புறம்பானதும் சாத்தியக்கூறுகளுக்கு எதிரானதுமாகும். அவருக்கு நினைவுக்கு வந்திருக்கும், நான் மூஸா என வாதம் செய்தேன், தனது நூலின் பெயர் மூஸாவின் கைத்தடி என்று வைத்தேன், இந்த கைத்தடி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதிக்கும் அந்த நபரை அழித்து விடும் என்று விரும்பினேன். மேலும் அவருக்கு நினைவுக்கு வந்திருக்கும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வாதிக்கும் அந்த நபர் தொடர்பாக தனது நூலாகிய மூஸாவின் கைத்தடியில் அவர் எனது வாழ்நாளில் பிளேக்கினால் மரணிப்பார்.

அவருக்கு நினைவுக்கு வந்திருக்கும். நான் அதே நூலில் எனது அந்த எதிரியை அழிக்காதவரை நான் மரணிக்கமாட்டேன் என முன்னறிவிப்பு செய்திருந்தேன். அப்படியிருக்கும்போது பிளேக் அவரைப் பிடித்துக்கொண்ட நிலையில் எந்தளவிற்கு வலியும் துக்கமும் அவரை சூழ்ந்திருக்கும் என்பதை ஒவ்வொரு மனிதராலும் சிந்திக்க முடியும். இந்தளவிற்கு தோல்வியடைந்து அவரின் அனைத்து இறையறிவிப்புகளும் பொய்யாகிவிட்ட பின்பும்கூட பிளேக்கின் நேரத்தில் அவருக்கு தான் மூஸாவாக இருப்பதன் மீது உறுதி இருந்தது என எவரால் நம்பமுடியும்? இல்லை இல்லை, ஒருபோதும் இல்லை. மாறாக பிளேக் அவரின் அனைத்து எண்ணங்களையும் தூள் தூளாக்கியிருக்கும். அவர் தவற்றில் இருந்ததை உணர்த்தியிருக்கும். இந்த சம்பவத்திற்கு பல நாட்களுக்கு முன்பே என்மீது இறைவன் வெளிப்படுத்தியிருந்தான், அவர் அந்த தவறான எண்ணங்களில் நிலைத்திருக்க மாட்டார். இறுதியில் அந்த எண்ணங்களிலிருந்து திரும்பி விடுவார். எனவே சந்தேகத்திற்கு இடமின்றி அவரைப் பற்றிக்கொண்ட திடீர் பிளேக் மற்றும் திடீரென வந்த மரணத்தின் காட்சியினால் அவர், இந்த பொருத்தமற்ற நேரம் எனது வாதத்திற்கு எதிரானதாகும் என்பதை மிக நன்றாக அறிந்திருந்தார். எனவே சந்தேகமின்றி அக்காட்சி, அதாவது அவரின் அனைத்து இறையறிவிப்புகளும் ெ-ய்த்தானுடையதாக இருந்தது என்பதை அவருக்கு உறுதி படுத்தியிருக்கும்.

இந்நிலையில் அவர் எந்த வழியுமின்றி சோகத்துடன், நான் தவற்றில் இருந்தேன். எதனை நான் புரிந்து வைத்திருந்தேனோ அவை இறைவன் புறமிருந்துள்ளது இல்லை என்பதை விளங்கியிருப்பார். இவ்வாறு விளங்கிக்கொள்வது அவருக்கு அவசியமாக இருந்தது என்பதை அடுத்து நாம் விவரிப்போம். ஏனென்றால் இந்த மரணத்தின் காட்சியினால் அவரின் இறையறிவிப்புக் கூற்றுகள் திடீரென ஒரு சுவர் சரிந்து விழுவதைப்போன்று சட்டென தவறாகி விட்டது. இது அவருக்கு, நான் பிளேக்கிலிருந்து தப்பிவிடுவேன் என நினைத்துப் பார்ப்பதை விட்டும் மிக தூரமாக இருந்தது.

ஏனென்றால் 7 ஏப்ரல் 1907 இல் எந்தநாளில் அவர் மரணித்தாரோ அதற்கு முன்பு எந்தளவிற்கு தீவிர அபாயகரமான பிளேக் லாஹூரில் இருந்தது என்றால் சில நாட்களில் இருநூறுக்கும் அதிகமான மக்கள் மரணித்தனர். அவரின் நெருக்கமான ஒருவர் அவருக்கு ஒருநாள் முன்னதாக பிளேக்கினால் இறந்துவிட்டார். அவரின் ஜனாஸாவிற்குச் சென்று அவர் பிளேக்கை வாங்கி வந்துள்ளார். எனவே இந்த அச்சமூட்டும் நோயிடமிருந்து நான் தப்பிவிடுவேன் என எவரால் கூற முடியும். மாறாக ஆயிரக்கணக்கான மக்கள் பிளேக்கில் சிக்கிய உடனேயே உறவினர்களிடம் உயில் எழுதிவிடுவார்கள். எனவே பிளேக்கில் சிக்கியவுடன் அவரின் அனைத்து குறிப்புகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. அவர் மரணித்துவிட்ட ஆயிரக்கணக்கான மனிதர்களை நினைத்துப் பார்த்து, குறிப்பாக யாக்கூபின் மரணத்தை நினைத்துப் பார்த்துவிட்டு நான் நிச்சயம் மரணித்துவிடுவேன் என்பதை புரிந்திருப்பார். இப்படிப்பட்ட நிலையில் நான் மூஸாவாக இருக்கின்றேன் எனும் வி-யத்தில் எவ்வாறு நிலை நின்றிருக்க முடியும். எனவே அவர் தனது தவறான கொள்கையை உடன்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

என்னைப் பொய்ப்படுத்துவது எளிதான காரியமல்ல. என்னைக் காஃபிர் என்று நீங்கள் கூறுவதற்கு முன்னதாக சுயமே நீங்கள் காஃபிராக ஆக வேண்டியது வரும். என்னை மார்க்கமற்றவன் என்றும் வழிதவறி விட்டவன் என்றும் கூறுவதற்கு முன்னதாக நீங்கள் வழிதவறிச் சென்று விட்டதையும் உங்களுக்கு ஏற்படுகின்ற இழிவையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். திருக்குர்ஆனையும் ஹதீஸையும் கை விட்டு விட்டவன் என்று என்னைப் பற்றி கூறுவதற்கு முன்னதாக முதலில் சுயமே திருக்குர்ஆனையும் ஹதீஸையும் நீங்கள் கை விட வேண்டியது வரும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 16; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

எடுத்துச் செல்லாதது இறைவனின் கருணையாகும். இறைவன் அவரின் கழுத்தைப் பிடித்து அவரை பின்வாங்கச் செய்து எவர்கள் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளானோ அவர்களில் இணைந்து விட்டார்:

**மாபெரும் வெற்றி – அமெரிக்காவின் பொய் நபி டாக்டர் அலெக்சாண்டர் டூயி எனது முன்னறிவிப்பின்படி அழிந்து விட்டார்**

மேற்கூறப்பட்ட தலைப்பின் கீழ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்: தெரிந்து கொள்ளுங்கள். தலைப்பில் பதியப்பட்டுள்ள பெயரைக் கொண்ட இந்த நபர் இஸ்லாத்தின் கொடிய எதிரியாக இருந்தார். இதுமட்டுமின்றி அவர் தூதரென பொய் வாதமும் செய்தார். ஹஸ்ரத் சையதுல் முர்ஸலீன், அஸ்திகுஸ் ஸாதிகீன், கைருல் முர்ஸலீன், இமாமுத் தையிபீன், ஜனாப் தகத்துஸ் மஆப் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை பொய்யரென்றும் இட்டுக்கட்டியவரென்றும் எண்ணி வந்தார். தனது அசுத்த வாயால் கெட்ட வார்த்தைகளாலும் ஆபாச வார்த்தைகளாலும் அன்னாரை பேசி வந்தார்.

இவ்வாறாக மார்க்க ரீதியான பொறாமையின் காரணத்தால் அவருக்குள் கடுமையான அசுத்த சிந்தனைகள் இருந்து வந்தது. எவ்வாறு பன்றிகளின் முன்பு முத்துக்களுக்கு சிறிதும் மதிப்பு இருப்பதில்லையோ அவ்வாறே அவர் ஏகத்துவ இஸ்லாத்தை மிகவும் அற்பமான பார்வையால் பார்த்து வந்தார். அதன் அழிவை எதிர்பார்த்திருந்தார். ஹஸ்ரத் ஈசாவை இறைவனாக நம்பி வந்தார். திரித்துவக் கொள்கையை முழு உலகிலும் பரப்ப எந்தளவிற்கு வேகம் கொண்டிருந்தார் என்றால் இதற்கு முன்பு நான் நூற்றுக்கணக்கான பாதிரிகளின் நூல்களைப் படித்திருக்கின்றேன். ஆனால் இப்படிப்பட்ட வேகத்தை எதிலும் பார்த்ததில்லை. அவருடைய பத்திரிக்கையான லியோஸ் ஆஃப் ஹீலிங்கின் 19 டிசம்பர் 1903 மற்றும் 14 பிப்ரவரி 1907 பதிப்பில் இந்த வாசகங்கள் இருந்தன: நான் இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றதாவது, இஸ்லாம் உலகிலிருந்து அழிந்துவிடும் அந்த நாள் விரைவில் வரவேண்டும். இறைவா! நீ அவ்வாறே செய்வாயாக. இறைவா! இஸ்லாத்தை அழித்து விடுவாயாக.

அடுத்து தனது குறிப்பைக் கொண்ட 12 டிசம்பர் 1903 பத்திரிக்கையில் தன்னைக் குறித்து உண்மையாக ரசூல் மற்றும் உண்மையான நபியென அறிவித்தவாறு கூறுகின்றார்:

நான் உண்மையான நபி இல்லையென்றால் பிறகு பூமிப்பரப்பின் மீது இறைவனின் நபியென எந்த மனிதரும் இல்லை. இதுமட்டுமின்றி அவர் கடும் இணைவைப்பாளராக இருந்தார். எனக்கு இறையறிவிப்பு வந்தது, இருப்பத்தைந்து ஆண்டுகளுக்குள் இயேசு மஸீஹ் வானத்திலிருந்து இறங்கி வருவார் என்றும் கூறி வந்தார். ஹஸ்ரத் ஈசாவை உண்மையில் இறைவன் அறிந்தவனாக இருக்கின்றான். இத்துடன் எனது உள்ளத்திற்கு துன்பத்தைத் தரக்கூடிய ஒரு வி-யமாக இது இருந்தது. அதாவது நான் ஏற்கனவே எழுதியதைப் போன்று அவர் நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் எதிரியாக இருந்தார். நான் அவரது குறிப்பைக் கொண்ட லியோஸ் ஆஃப் ஹீலிங் பத்திரிக்கையை வாங்கி வந்தேன். அவரது தீய பேச்சுக்களைப் பற்றி எப்போதும் எனக்கு தகவல் கிடைத்து வந்தது. அவரது வரம்பு மீறல் எல்லையைத் தொட்டபோது நான் ஆங்கிலத்தில் ஒரு கடிதத்தை எழுதி அவருக்கு அனுப்பி வைத்தேன்.

முபாகலாவிற்காக அவரிடம், அதன் மூலம் இறைவன் நம் இருவரில் எவர் பொய்யரோ அவரை உண்மையாளரின் வாழ்நாளில் அழித்து விடட்டும் எனும் வேண்டுகோள் விடுத்தேன். இந்த வேண்டுகோளை இரண்டு முறை அதாவது 1902 பிறகு 1903 இல் அவருக்கு அனுப்பப்பட்டது. அமெரிக்காவின் சில பெயர்பெற்ற பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டது. அவற்றின் பெயர் அடிக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 32 பத்திரிக்கைகளின் பெயர்களை அடிக்குறிப்பில் வெளியிட்டுள்ளார்கள். அவற்றில் இது தொடர்பான செய்திகள் வெளிவந்தன.)

அந்த முபாகலா கட்டுரையில் நான் பொய்யரின் மீது ஆக்கினைக்கான துஆவையும் செய்திருந்தேன். இறைவன் பொய்யரின் பொய்யை தனது தீர்ப்பின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்று இறைவனிடம் வேண்டியிருந்தேன். இந்த எனது கட்டுரை நான் இப்போது எழுதியிருந்ததைப் போன்று அமெரிக்காவின் சில தினசரி மற்றும் பெயர்பெற்ற பத்திரிக்கைகளில் நன்றாக வெளியிடப்பட்டது. மேலும் இந்த பத்திரிக்கைகள் அமெரிக்காவின் கிறித்துவர்களுடையதாகும். அவற்றுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இருக்க வில்லை.

பத்திரிக்கைகளில் வெளியிடும் தேவை எனக்கு ஏன் ஏற்பட்டது என்றால் பொய் நபி டாக்டர் டூயி நேரடியாக எனக்கு பதிலளிக்க வில்லை. இறுதியில் நான் அந்த முபாகலா கட்டுரையை அமெரிக்காவின் அந்த பெயர்பெற்ற அந்த பத்திரிக்கைகளில், அவை தினசரியாகவும் உலகில் அதிகளவில் செல்லக்கூடியதாகவும் இருந்தன, வெளியிட்டு விட்டேன். இது இறைவனின் அருளாகும். அதாவது அமெரிக்க பத்திரிக்கைகளின் ஆசிரியர்கள் கிறித்துவர்களாக இருந்தனர். இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்தனர். இருந்தும் அவர்கள் நடுநிலையுடன் எனது முபாகலா கட்டுரையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அதன் சர்சை ஏற்படும் அளவிற்கு பெருமளவில் வெளியிட்டனர்.

எனது முபாகலாவின் சுருக்கம் இதுவாகும், இஸ்லாம் உண்மையானதாகும். கிறித்துவ மார்க்கத்தின் கொள்கை பொய்யானதாகும். நான் இறைவன் புறமிருந்து இறுதி காலத்தில் வரவேண்டிய அதே மஸீஹாவேன். நபிமார்களின் வேதங்களில் அதன் வாக்குறுதி உள்ளது. மேலும் நான் அதில் எழுதினேன், டாக்டர் டூயி தனது ரசூல் எனும் வாதத்திலும் திரித்துவக் கொள்கையிலும் பொய்யராவார். அவர் என்னுடன் முபாகலா செய்தால் எனது வாழ்நாளிலேயே மிகவும் தோல்வி மற்றும் சோகத்துடன் மரணிப்பார். முபாகலா செய்யாவிட்டால் அப்போதும் அவர் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது. அதற்கான பதிலில் துர்பாக்கியசாலியான டூயி டிசம்பர் 1903 இன் ஒரு அறிக்கையிலும் மேலும் 26 டிசம்பர் 1903 ஆகிய தனது அறிக்கைகளிலும் தன்சார்பாக இந்த ஒருசில வாசகங்களை ஆங்கிலத்தில் வெளியிட்டார். அவற்றின் மொழியாக்கம் இதுவாகும்:

இந்தியாவில் ஒரு முட்டாள் முஹம்மதிய மஸீஹ் இருக்கின்றார். இயேசு மஸீஹின் கல்லறை காஷ்மீரில் இருப்பதாக அவர் எனக்கு மீண்டும் மீண்டும் எழுதுகின்றார். அதற்கு ஏன் பதிலளிக்கவில்லை, அந்த மனிதருக்கு ஏன் பதிலளிக்க வில்லை என மக்கள் என்னிடம் கேட்கின்றனர். நான் அந்த கொசுக்களுக்கும் ஈக்களுக்கும் பதிலளிப்பேன் என நீங்கள் நினைக்கின்றீர்களா? நான் அவற்றின் மீது எனது கால்களை வைத்து அவற்றை நசுக்கி கொன்று விடுவேன்.

அடுத்து 19 டிசம்பர் 1902 அறிக்கையில் எழுதுகின்றார்: எனது பணி என்னவென்றால் நான் கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கில் வாழும் (கிறித்தவ) மக்களை ஒன்று திரட்டி, கிறித்தவர்களை இந்த நகரிலும் பிற நகர்களிலும் குடியமர்த்துவதாகும். எதுவரையென்றால் முஹம்மதிய்ய மார்க்கம் உலகிலிருந்து துடைக்கப்பட்டுவிட வேண்டும். இறைவா! எங்களுக்கு அந்நேரத்தைக் காட்டுவாயாக,,

இவ்வாறாக இந்த மனிதர், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா மட்டுமின்றி முழு உலகிலும் வெளியிடப்பட்ட எனது முபாகலா கட்டுரைக்குப் பிறகு வரம்பு மீறலில் நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டே சென்றார். எந்த ஒன்றை நான் என் தொடர்பாகவும் அவர் தொடர்பாகவும் இறைவனிடம் தீர்ப்பு வேண்டியிருந்ததை நான் எதிர்நோக்கி இருந்தேன். நிச்சயமாக இறைவன் உண்மைத் தீர்பை வழங்குவான். இறைவனின் தீர்ப்பு பொய்யரையும் உண்மையாளரையும் பிரித்துக் காட்டிவிடும்.

நான் எப்போதும் இதுதொடர்பாக இறைவனிடம் துஆ செய்தேன். பொய்யரின் மரணத்தை வேண்டினேன். எனவே பலமுறை இறைவன் எனக்கு, நீர் மேலோங்குவீர், எதிரி அழிக்கப்படுவார் என தெரிவித்தான். பிறகு டூயி மரணிப்பதற்கு ஏறக்குறைய பதினைந்து நாட்களுக்கு

முன்னதாக இறைவன் தனது இறையறிவிப்பின் மூலமாக எனக்கு வெற்றிக்கான செய்தியைத் தெரிவித்தான். அதனை நான், காதியானின் ஆரியர்களும் நாமும் எனும் அந்த நூலின் தலைப்புப் பக்கத்தின் முதல் பக்கத்தின் இரண்டாம் பத்தியில் டூயியின் மரணத்திற்கு ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்கு முன்னதாக வெளியிட்டிருந்தேன் அது இதுவாகும்:

**புத்தம்புதிய அடையாளத்தின் முன்னறிவிப்பு**

நான் ஒரு புத்தம்புதிய அடையாளத்தை வெளிப்படுத்துவேன் என இறைவன் கூறுகின்றான். அதில் மாபெரும் வெற்றி கிடைக்கும். அது முழு உலகிற்கும் ஒரு அடையாளமாக இருக்கும். (அதாவது அதன் வெளிப்பாடு இந்தியா வரையான எல்லைக்குட்டதாக இருக்காது) இறைவனின் கைகளால் வானத்திலிருந்து வெளிப்படும். ஒவ்வொரு கண்ணும் அதனை எதிர்பாருங்கள். ஏனென்றால் இறைவன் அதனை விரைவில் வெளிப்படுத்துவான். அதன் மூலமாக அனைத்து சமுதாயங்களும் ஏசிப்பேசப்படும் இந்த எளியவன் அவன் புறமிருந்து உள்ளவனாவேன் எனும் சாட்சியை அது சான்று பகரும். இதிலிருந்து பயன் பெறுபவருக்கு வாழ்த்துக்கள்.

**வெளியிடுபவர் - மிர்ஸா குலாம் அஹ்மது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் - வெளியீடு 20 பிப்ரவரி 1907**

(மாபெரும் வெற்றிக்கான காரணியாக இருக்கும்) இந்த அடையாளம் முழு உலகிற்கும், ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியாவிற்கும் ஒரு தெள்ளத்தெளிவான அடையாளமாக அமையலாம் என்பது வெளிப்படையாகும். அது இதே டூயியின் மரணத்தின் அடையாளமாகும். ஏனென்றால் எனது முன்னறிவிப்பினால் வெளிப்பட்டிருந்த அடையாளம் பஞ்சாப் மற்றும் இந்திய அளவிலான எல்லைக்குட்பட்டதாக இருந்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் எந்தவொரு மனிதருக்கும் அவை வெளிப்பட்ட செய்தி தெரியாது. ஆனால் இந்த அடையாளம் பஞ்சாபில் முன்னறிவிப்பாக வெளிப்பட்டு அமெரிக்காவை சென்றடைந்து இப்படிப்பட்ட மனிதரின் மூலமாக, அவரை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் ஒவ்வொருவரும் அறிந்திருந்தனர். அந்த நாட்டின் ஆங்கில பத்திரிக்கைகளுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டதற்கேற்ப அவரது மரணத்தோடு நிறைவேறியது. (அலஹாபாத்திலிருந்து வெளிவரும்) பயோனியர் செய்தியில் 11 மார்ச் 1907 லும் சோல் அண்ட் மிலிட்டரி கெஸட்டின் (லாஹூரிலிருந்து வெளிவருகின்றது) 12 மார்ச் 1907 செய்தியிலும் இண்டேன் டெய்லி டெலகிராஃபின் (லக்னோவிலிருந்து வெளிவருகின்றது) 12 மார்ச் 1907 செய்தியிலும் இந்தச் செய்தி வெளியிடப்பட்டன.

இவ்வாறாக ஏறக்குறைய முழு உலகிலும் இந்தச் செய்தி வெளியிடப்பட்டது. இந்த நபர் தனது உலகியல் தகுதியின் அடிப்படையில் மாபெரும் நவாப்கள் மற்றும் இளவரசர்களைப் போன்றவராக கருதப்பட்டு வந்தார். அமெரிக்காவில் முஸ்லிமாக மாறிய விப் என்பவர் அவரைப்பற்றி எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார், டாக்டர் டூயி அந்நாட்டில் பெரும் மதிப்புடனும் இளவரசர்களைப் போன்றும் வாழ்ந்து வருகிறார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அவருக்கு இருக்கும் இந்த மதிப்பு மற்றும் புகழை மீறி இறையருளால் இது நடந்துள்ளது. அதாவது அவருக்கு எதிராக அமெரிக்காவின் பெரும்பெரும் பெயர்பெற்ற தினசரி பத்திரிக்கைகள் எனது முபாகலா கட்டுரையை வெளியிட்டது. மொத்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிவிலும் பிரபலமாக்கி விட்டது.

அடுத்து இந்த பொது வெளியீட்டிற்குப் பிறகு எந்த அழிவு மற்றும் தோல்வியைப் பற்றி முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்ததோ அது எந்தளவிற்கு தெளிவாக நிறைவேறியது என்றால் அதைத்தாண்டி முழுமையாகவும் நிறைவாகவும் வெளிப்படுவதை கற்பனையில்கூட உதித்திட முடியாததாகும். அவரின் வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் சோகம் சூழ்ந்து கொண்டது. அவர் மோசடி செய்தது நிரூபணமாகியது. அவர் மதுவை தனது போதனையில் தடைசெய்யப்பட்டதாக கூறியிருந்தார். ஆனால் அவரே மது குடிப்பவராக இருந்தது நிரூபணமாகியது. அவர் தான் நிறுவிய நகரான சியோனிலிருந்து அதனை அவர் பல இலட்ச ரூபாய்களை செலவு செய்து நிறுவியிருந்தார். பெரும் சோகத்துடன் வெளியேற்றப்பட்டார்.

மேலும் அவர் வசம் இருந்த ஏழு கோடி ரொக்கப் பணம் அவரிடமிருந்து அபகரிக்கப்பட்டது. அவரின் மனைவியும் அவரின் மகனும் அவருக்கு எதிரிகளாகி விட்டனர். அவரின் தந்தை அவரை முறைதவறி பிறந்தவராக அறிக்கை விட்டார். இதனால் அவர் சமுதாயத்தில் தகாத முறையில் பிறந்தவராக நிரூபிக்கப்பட்டார். நான் நோயாளிகளை அற்புதமான முறையில் சரிசெய்வேன் என வாதித்திருந்தார். அவரின் இந்த அனைத்து கூற்றுக்களும் வெறும் பொய்யாக இருந்தது என நிரூபணமாகியது. ஒவ்வொரு இழிவையும் அவருக்கு சந்திக்க நேர்ந்தது. இறுதியில் அவர்மீது பக்க வாதம் விழுந்தது. ஒரு பதாகையைப் போல் சில மனிதர்கள் அவரை தூக்கித் திரிந்தனர். பிறகு பெரும் கவலைகளின் காரணமாக சுய நினைவின்றி பைத்தியமாகி விட்டார்.

எனக்கு இப்போது வயது அதிகமாகும். நான் நாளுக்கு நாள் இளமையாகிக் கொண்டே செல்கிறேன். மக்கள் வயோதிகர்களாகிக்கொண்டே செல்கின்றனர் எனும் அவரது வாதம் வெறும் பொய்யென நிரூபணமானது. இறுதியில் மார்ச் 1907 இன் முதலட வாரத்திலேயே பெரும் ஏமாற்றம், வலி மற்றும் சோகத்துடன் மரணித்து விட்டார். இதைவிட மேலான அற்புதம் வேறு என்ன இருக்க முடியும் என்பது இப்போது வெளிப்படை. மேலும் எனது அசல் பணி சிலுவையை உடைப்பதாகும். எனவே அவரின் மரணத்தால் சிலுவையின் ஒரு பெரும் பகுதி உடைந்து விட்டது. காரணம் அவர் முழு உலகிலும் சிலுவையை ஆதரிக்கும் முதல்தர நபராக இருந்தார். அவர் இறைத்தூதர் என வாதம் செய்து வந்தார். எனது வேண்டுதலால் அனைத்து முஸ்லிம்களும் அழிந்து விடுவார்கள், இஸ்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும், கஅபா ஆலயம் பாழடைந்து விடும் என கூறி வந்தார். எனவே இறைவன் எனது கரங்களால் அவரை அழித்து விட்டான்.

அவரின் மரணத்தால் பன்றியைக் கொல்வார் எனும் முன்னறிவிப்பு தெள்ளத்தெளிவாக நிறைவேறி விட்டதை நான் அறிவேன். ஏனென்றால் இப்படிப்பட்ட மனிதரைவிட அதிக அபாயகரமானவர் யார் இருக்க முடியும்? அவர் பொய்யாக இறைத்தூதர் என்று வாதித்து வந்தார். பன்றியைப்போல் பொய்யின் அசுத்தத்தை உண்டு வந்தார். அவர் எழுதியிருந்ததைப் போன்று அவருடன் பெரும் செல்வந்தர்களாக இருந்த ஒரு இலட்சம்பேர் வரை அவருடன் சேர்ந்து விட்டனர். மாறாக உண்மை என்னவென்றால் முஸைலமா கத்தாப் மற்றும் அஸ்வத் அன்ஸி ஆகியோர் இவருக்கு எதிரில் ஒன்றுமற்றவர்களாக இருந்தனர். அவரைப்போன்ற புகழ் அவர்களுக்கு இருக்கவில்லை. அவரப்போன்று கோடிக்கணக்கான பணத்திற்கு அவர்கள் அதிபதியாக இருக்கவில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கையால் கொல்லப்படும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களால் கூறப்பட்டிருந்த அந்த பன்றி இதுவேயாகும் என்று என்னால் சத்தியம் செய்ய முடியும்.

நான் அவரை முபாகலாவிற்கு அழைத்திருக்காதிருந்தால், நான் அவருக்காக ஆக்கினை துஆ செய்திருக்காதிருந்தால், அவரின் அழிவின் முன்னறிவிப்பு வெளியிடாதிருந்தால் அவரின் மரணம் இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றாக நின்றிருக்காது. ஆனால் நான் நூற்றுக்கணக்கான பத்திரிக்கைகளில் முன்பிருந்தே, அவர் எனது வாழ்நாளிலேயே அழிந்து விடுவார். நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாவேன். டூயி பொய்யராவார் என வெளியிட்டு விட்டேன். அதற்கான ஆதாரம் அவர் எனது வாழ்நாளில் இழிவு மற்றும் ஏமாற்றத்துடன் அழிந்து விடுவார் என மீண்டும் மீண்டும் எழுதினேன். அதன்படி அவர் எனது வாழ்நாளிலேயே அழிந்து விட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் முன்னறிவிப்பை மெய்ப்பிக்கும் இதைவிட மேலான அற்புதம் வேறு என்ன இருக்க முடியும்? உண்மைக்கு எதிரியாக இருப்பவரால் மட்டுமே இதனை மறுக்க முடியும்.

......☆......☆......☆......

## ஜங்கே முகத்தஸ் – புனிதப் போர்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் டெப்டி அப்துல்லாஹ் ஆத்தம் என்பவருக்கும் இடையில் நடைபெற்ற மகத்தான விவாதம்

(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)

22 மே 1893 முதல் 5 ஜூன் 1893 வரை அமிர்தசரஸில் கிறித்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் வாக்குவாதம் நடந்தது. அதில் இஸ்லாத்தின் சார்பாக ஸய்யிதினா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கிறிஸ்தவர்கள் சார்பாக டெபுடி அப்துல்லாஹ் ஆத்தம் என்பவருக்கும் இடையில் வாக்குவாதம் நடைபெற்றது. அது ஜங்கே முகத்தஸ் என்ற பெயரில் காதியான் ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஹாஜி ஹாஃபிஸ் ஹகீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் அவர்களால் 20 அக்டோபர் 1904 –ல் வெளியிடப்பட்டது. வாசகர்கள் ரூஹானி கஸாயீன் தொகுதி 6 –ல் இதனைப் படித்திருக்கலாம். ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் (ரலி) அவர்கள் ரூஹானி கஸாயீன் தொகுதி 6 –ன் தொடக்கத்தில் அறிமுகமாக எழுதியதை வாசகர்களின் பயன்பாட்டிற்காக எடுத்து வைக்கப்படுகிறது.

### வாதத்தின் காரணம்:

ரூஹானி கஸாயீன் தொகுதி 1 மற்றும் 3 –ல் நமது பஞ்சாப் மற்றும் இந்திய கிறிஸ்தவ மிஷனரிகளின் செயல்பாடுகள் பற்றி கூறப்படுகிறது. அப்போது கிறித்தவத்தின் பிரச்சாரம் உச்சத்தில் இருந்தது என்று எழுதி விட்டோம். பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் பிரச்சார நிலையங்கள் நிலைநாட்டப்பட்டன. இந்திய முஸ்லிம்கள் மற்றும் பிற சமுதாயங்களிலிருந்து மக்கள் கிறித்தவராக மாறிக் கொண்டிருந்தனர். சில வருடங்களிலேயே இந்தியா, கிறித்தவர்களின் கையில் வந்து விடும் என்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது. இந்த வகையில் 1888 –ல் பஞ்சாபின் லெப்டினெனன்ட் கவர்னர் சார்லஸ் எச்சிஸன் சிம்லாவில் கிறித்தவ பிரச்சாரகர்களின் ஒரு கூட்டத்தில் சொற்பொழி நிகழ்த்தினார். "இந்தியாவில் சாதாரணமாக மக்கள் தொகை எவ்வளவு வேகமாக அதிகரிக்கிறது. அதனை விட நான்கைந்து மடங்கு வேகமாக கிறித்தவம் இந்த நாட்டில் பரவி வருகிறது. இப்போது இந்திய கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை நெருங்கி விட்டது."

('தி மிஷன்ஸ்' தொகுத்தவர் ரெவரெண்ட் ராபர்ட் கிளார்க்)

முன்னர் 1851 –ல் இந்திய கிறித்தவர்கள் 91,092 பேர் இருந்தனர். 1881 –ல் அவர்களின் எண்ணிக்கை 4,17,372 ஆனது. அந்நேரம் இந்த விவாதம் நடைபெற்றது. இதில் கிறித்தவர்களின் பக்கம் அழைக்கின்ற கிறிஸ்தவ மிஷனரிகள் ஐரோப்பிய மற்றும் இந்திய பஞ்சாபில் இருபதுக்கணக்கான இடங்களிலும் உள்ள மக்களையும் கிறிஸ்தவத்தின் பக்கம் அழைத்தனர். மேலும் தஜ்ஜால் முழு வீச்சுடன் இஸ்லாம் மார்க்கத்தை அழிக்க எப்போதும் தயாராக இருந்தனர். இஸ்லாமிய அறிஞர்கள் கனவுகளின் முயலாக இருந்தனர். எல்லாவற்றிற்கும் முதலில் சர்ச் சொசைட்டியின் மிஷனரி இந்தியாவில் 1799 –ல் பிரச்சாரத்தைத் தொடங்கியது. ஆனால் அப்போது சில மிஷனரி சொசைட்டிகள் பணி செய்து வந்தன.

அவற்றின் தலைமையகம் இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தன. 1901 –ல் அந்த மிஷனரி சொசைட்டிகளின் எண்ணிக்கை 37 ஆக இருந்தது. மேலும் இந்த சொசைட்டிகளுடன் தொடர்பில்லாத நிறைய மிஷனரிகளும் இருந்தன. மத்திய ஆசியாவில் இந்த கிறித்தவ மிஷனரிகள் வேலை செய்வதற்கு பஞ்சாப் புவியியல் ரீதியான (Base) அடித்தளமாகக் கருதப்பட்டது. பஞ்சாபின் 13 பிரபல நகரங்களில் அவற்றின் பெரும் பெரும் மிஷன்கள் நிலைநாட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று அமிர்தசரஸில் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த மிஷன் சர்ச் மிஷனரி சொசைட்டி 1852 –ல் நிலைநாட்டப்பட்டது. மேலும் சண்டியாலா என்ற அமிர்தசரஸ் மாவட்ட கிறித்தவ மிஷன் 1854 –ல் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் டாக்டர் ஹென்றி மார்ட்டின் கிளார்க் M.D.C.M.S அமிர்தசரஸ் மாவட்டத்தின் மெடிக்கல் மிஷனரி உடைய ஒரு கிளை சண்டியாலாவில் இயங்கி வந்தது. அது கிறித்தவத்தின் வெளிச்சத்திற்கு புதிய வாசலாக நிரூபணமானது. கிறித்தவ அழைப்பாளர்கள் சொற்பொழிவைச் செய்தனர்.

சண்டியாலா முஸ்லிம்களில் ஒருவரான முஹம்மது பக்ஷ் பாஞ்தா உள்ளூர் அலுவலராக இருந்தார். அவர் சாதாரணக் கல்வி கற்றவராக இருந்தும் அவர்களுக்கு எதிரில் நின்றார். அவர் பிற முஸ்லிம் சகோதரர்களையும் கிறிஸ்தவ அழைப்பாளர்களிடம் கேள்கி கேட்கக் கற்பித்தார். அப்போது சண்டியாலாவின் முஸ்லிம்களுக்கும் கிறித்தவ அழைப்பாளர்களுக்கும் இடையில் வாக்குவாதம் தொடங்கியது. இறுதியில் சண்டியாலாவின் கிறித்தவர்கள் டாக்டர் கிளார்க் இடம் நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறினர். அவர் சண்டியாலா கிறித்தவர்கள் சார்பாக மியான் முஹம்மது பக்ஷ் சாஹிபை அழைத்தவாறு சண்டியாலா முஸ்லிம்களின் பெயரில் ஒரு கடிதம் எழுதினார். அதில் டாக்டர் கிளார்க் சண்டியாலா கிறித்தவர்கள் சார்பாக எழுதினார்:

"நீங்கள் சுயமாகவோ அல்லது உங்கள் மார்க்கம் சார்ந்தவர்களுடன் ஆலோசித்தோ ஒரு நேரத்தை நிர்ணயியுங்கள். எந்தப் பெரியவர் மீது நீங்கள் திருப்தி கொள்வீர்களோ அவர்களை அழைத்துக் கொள்ளுங்கள். அதே நேரத்தில் நாங்களும் எங்கள் சபையிலிருந்து ஒருவரை நியமிப்போம். கூட்டமும், தீர்ப்பும் மேற்கண்ட விபரம் தெரிந்தவர்களுக்குத் தெளிவாகட்டும்."

மேலும் எழுதினார்: "இஸ்லாமியர்கள் இந்த வாதத்தில் பங்கு பெற விரும்பவில்லை என்றால் வருங்காலத்தில் தகாத வார்த்தைகளை எடுத்து வைக்காதீர்கள். அழைக்கக்கூடிய நேரம் அல்லது பிற சந்தர்ப்பங்களில் அடிப்படையற்ற ஆதாரங்களைத் தருவதிலிருந்து அமைதியாக இருங்கள்."

(ஹிஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 60)

இந்தக் கடிதம் மியான் முஹம்மது பக்ஷ் சாஹிபுக்கு 11 ஏப்ரல் 1893 அன்று கிடைத்தது. அவர் அந்தக் கடிதத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி விட்டார். அந்தக் கடிதத்தில் ஹுஸூர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் வைத்திருந்தார்.

"சண்டியாலாவில் இஸ்லாமியர்கள் பலவீனமானர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளனர். எனவே உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தாங்கள் சண்டியாலாவின் இஸ்லாமியர்களுக்கு உதவி செய்யுங்கள். இல்லை என்றால் இஸ்லாமியர்கள் மீது பழி ஏற்பட்டு விடும்."

(ஹிஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 59)

இந்தக் கடிதம் கிடைத்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மியான் முஹம்மது பக்ஷ் சாஹிபுக்கு இந்தக் கடிதத்திற்குப் பொருத்தமான பதில் எழுதியதுடன் தனது ஒரு கடிதம் 13 ஏப்ரல் 1893 –ல் நேரடியாக சண்டியாலா கிறித்தவர்களுக்கு என்ற பெயரில் டாக்டர் கிளார்க்கிற்கு அமிர்தசரஸ் வழியாக அனுப்பினார்கள். அதில் மியான் முஹம்மது பக்ஷ் சாஹிப் பெயரில் எழுதப்பட்ட விவாத அழைப்புக் கடிதம் பற்றி குறிப்பிட்டவாறு எழுதினார்கள்:

"சண்டியாலா முஸ்லிம்களுக்கு நம்மை விட அதிக உரிமை இல்லை. இன்னும் சொல்வதாயின், இக்காலத்தில் சிறப்பும்

கருணையும் உள்ள இறைவன் இந்த எளியவனை இதே பணிக்காக அனுப்பியுள்ளான். எனவே இந்த நேரத்தில் அமைதியாக இருந்தால் அது ஒரு பெரும் பாவமாகும். எனவே உங்களுக்கு தகவல் தருகிறேன். நான் இந்தப் பணிக்காகத் தயாராக உள்ளேன்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 61)

மேலும் எழுதினார்கள்: ''எந்த ஆன்மீக அடையாளங்களைக் குறித்து மார்க்கமும் வேதங்களும் கூறுகின்றனவோ அது இப்போது இருக்கிறதா? இல்லையா? அவற்றைக் கொண்டுள்ள உயிருள்ள மார்க்கம் மற்றும் இறந்த மார்க்கம் பற்றி பிரித்தறிய இந்த விவாதம் நடக்கும்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 63–64)

''இவ்விஷயம் இம்முறையில் எடுத்து வைக்கப்படும். இஸ்லாத்தைச் சார்ந்த ஒருவர் முழு இஸ்லாமியராக இருப்பதற்காக திருக்குர்ஆனிலுள்ள அதன் போதனை மற்றும் அடையாளங்களுக்கு ஏற்ப தம் தரப்பை நிரூபிக்க வேண்டும். முடியவில்லை என்றால் அவர் பொய் கூறியவர் ஆவார். முஸ்லிம் அல்ல. அதுபோன்றே கிறித்தவ சாஹிபுகளில் ஒருவர் அந்த போதனைகள் மற்றும் அடையாளங்களாக இஞ்சீல் ஷரீஃபில் உள்ளவற்றைக் கொண்டு தம் தரப்பை நிரூப்கக வேண்டும். அவரால் நிரூபிக்க முடியவில்லை என்றால் அவர் பொய் கூறுபவர் ஆவார். அவர் கிறித்தவர் அல்லர்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 62)

இதற்கான பதிலில் 18 ஏப்ரல் 1893 –ல் சண்டியாலா கிறித்தவர்கள் சார்பாக மார்ட்டின் கிளார்க் எழுதினார்: ''எங்கள் வாதம் உங்களுடன் அல்ல. சண்டியாலா முஹம்மதியர்களுடன் ஆகும். நாங்கள் உங்கள் வாதத்தை ஏற்க முடியாதவர்களாக இருக்கிறோம். அவர்களிடம் நாங்கள் கடிதம் எழுதியுள்ளோம். அவர்களின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். அவர்கள் உங்களை ஏற்றுக் கொண்டால் இந்தப் புனிதப் போருக்கு உங்களை தமது சார்பாக எடுத்து வைத்தால் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. மாறாக, மிகவும் மகிழ்ச்சியாகும்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 64)

23 ஏப்ரல் 1893 –ல் இந்தக் கடிதத்திற்கு பதில் அனுப்பியவாறு பாதிரி சாஹிபுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதினார்கள்: ''நான் சில நண்பர்களை தூதுவர்களாக நியமித்து உங்களிடம் அனுப்புகிறேன். இந்தத் தூய போருக்கு என்னை நீங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகிறேன். சண்டியாலாவின் முஸ்லிம் நண்பர்களுக்கு நீங்கள் எழுதிய முதல் கடிதம் எனக்குக் கிடைத்தது. அதில் எம்மை எதிர்த்து நிற்க எவராவது இருக்கிறீர்களா? என்று ஒரு வாக்கியம் இருந்ததைப் படித்தேன். எனது ஆன்மா நான் இருக்கிறேன் என்றும் என் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றி தருவான் என்றும் கூறியது. அல்லாஹ் உண்மையை வெளியில் கொண்டு வருவான். எனக்கு கிடைத்த உண்மை மற்றும் என்னிடம் உதித்த அந்த சூரியன் இப்போது மறைந்திருக்க விரும்பவில்லை. இப்போது அது சுடர் வீசி ஜொலிப்பதைப் பார்க்கிறேன். அது உள்ளங்கள் மீது தனது கையை வைக்கும். அவற்றை தம் பக்கம் ஈர்க்கும்.''

மேலும் கூறுகிறார்கள்: ''நீங்கள் அறிகிறீர்கள். சண்டியாலாவில் பிரபலமான பெயர் பெற்ற அறிஞர்கள் இல்லை. நீங்கள் அறியாதவர்களிடம் பேசி விட்டுச் செல்வது உங்கள் பெருமைக்கும் தூரமான ஒன்றாகும். இந்த எளியவனைப் பற்றி நீங்கள் அறியாதவர் அல்ல. 10 ஆண்டுகளாக களத்தில் நிற்கிறேன். சண்டியாலாவில் எனக்குத் தெரிந்த வரையில் களத்தில் வீரராக ஏற்கத்தக் ஒருவர் கூட இல்லை.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 65)

மேலும் அன்னார் இதனையும் தெளிவுபடுத்தி விட்டார்கள்: '' இந்த விவாதம் பூமியுடன் நின்று விடாது. மாறாக வானமும் இதில் இணையும். ஆன்மீக வாழ்வு மற்றும் வானத்தின் ஏற்புடைமை மற்றும் பிரகாசமான பின்புலம் உள்ள மார்க்கம் எது? என்பதில் என்னை எதிர்த்து தமது வேதத்தின் தாக்கத்துடன் அவர் தம் தரப்பை எடுத்து வைக்கட்டும் என்பதுவே போட்டியாகும்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 66)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுவர்களின் குழு அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு அமிர்தசரஸ் வந்தடைந்து டாக்டர் ஹென்றி கிளார்க்கிடம் கலந்துரையாடி, வாதத்திற்கு நிபந்தனைகள் வகுக்கப்பட்டன. 24 ஏப்ரல் 1893 –ல் டாக்டர் கிளார்க் அன்னாருக்குக் கடிதம் எழுதினார்: ''முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஜனாப் என்னுடன் போட்டிக்கு அழைப்பு விடுத்துள்ளீர்கள். அதனை நான் மகிழ்ச்சியுடம் ஏற்றுக் கொள்கிறேன். உங்கள் தூதுக் குழு உங்கள் சார்பாக விவாதம் மற்றும் நிபந்தனைகளை முடிவு செய்து விட்டது. நீங்கள் இந்த நிபந்தனைகளை ஏற்கிறீர்களா? இல்லையா? என்று தகவல் தெரிவியுங்கள்.''

(ஹிஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 66, 67)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 25 ஏப்ரல் 1893 –ல் பாதிரி டாக்டர் கிளார்க்கிற்குப் பதில் எழுதினார்கள்: ''எனது நண்பர்களும் கையெழுத்திட்ட இந்த எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்கிறேன்.''

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 69)

இணக்கம் தெரிவித்தவாறு அன்னார் இதனையும் தெரிவித்தார்கள். இந்த விவாதத்தை இரு மார்க்கத்தினரும் ஏற்பதற்காக, ஆறு நாள் விவாதத்திற்குப் பிறகு ஏழாவது நாள் ஓர் ஆன்மீகப் போட்டியாக முபாஹிலா செய்ய வேண்டும். இரு பிரிவினரும் முபாஹிலாவில் இந்த துஆவை செய்ய வேண்டும் என்பது அவசியமாகும். உதாரணமாக, கிறித்தவப் பிரிவு கூற வேண்டும். 'நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ள மஸீஹ் நாஸிரியே இறைவன் ஆவார். திருக்குர்ஆன் மனிதனின் இட்டுக்கட்டு ஆகும்; இறை வேதமல்ல. நான் இக்கருத்தில் உண்மையாளன் இல்லை எனில் ஒரு வருடத்திற்குள் தண்டனை இறங்க வேண்டும். அதன் மூலம் எனது இழிவு வெளிப்பட வேண்டும்.'

மேலும் இந்த எளியவனும் துஆ செய்வான். 'முழுமையான சான்றான்மை மிக்க இறைவா! உண்மையில் ஈஸா மஸீஹ் நாஸிரி உனது அடியாரும் தூதரும் ஆவார். ஒருபோதும் இறைவன் அல்ல. திருக்குர்ஆன் உனது தூய வேதமும், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் உனது அன்பிற்குரிய தேர்ந்தெடுக்கப்பட்ட ரஸூல் ஆவார்கள். நான் இந்தக் கூற்றில் உண்மையானவன் இல்லை என்றால் என் மீது ஒரு வருடத்திற்குள் எனது இழிவு வெளிப்படத்தக்க

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

தண்டனையை இறங்குவாயாக. இறைவா! ஒரு வருடத்திற்குள் எனக்கு ஆதரவாக ஓர் அடையாளமும் வெளிப்படவில்லை எனில் அதுவும் அந்த அடையாளத்திற்கு முன் எல்லா எதிரிகளும் செயலற்ற விடத்தக்கதாக இருக்கவில்லை எனில் எனது இழிவுக்கும் அதுவே போதுமானதாகும்.

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 70)

**வானத்தின் அடையாளம் காட்டுமாறு அழைப்பு:**

அதற்குப் பிறகு அன்னார் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அதன் தலைப்பு டாக்டர் பாதிரி கிளார்க் உடைய ஜங்கே முகத்தஸ் மற்றும் அவருக்கு எதிரான பிரசுரத்தில் விவாதத்திற்கு முடிவு செய்யப்பட்ட நிபந்தனைகளைக் குறிப்பிட்டது மட்டுமின்றி விவாதத்திற்குப் பிறகு முபாஹிலா மற்றும் அடையாளம் வெளியிடுதல் சம்பந்தமான அழைப்பும் தரப்பட்டிருந்தது.

**முபாஹிலா பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள்:**

“இரு தரப்பினரும் தமது மார்க்கத்திற்கு ஆதரவாக இறைவனுடைய வானத்து அடையாளங்களை வேண்டுவதும், அதனை ஒரு வருடத்திற்குள் நிறைவேற்றுமாறும் வேண்டுவதும், அப்பிரிவுக்கு ஆதரவாக வானத்து அடையாளம் வெளிப்படுவதும், அது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதும், அதனை எதிர் தரப்பினர் எதிர்த்து நிற்க முடியாததாக இருப்பதும், தோல்வி அடைந்த மார்க்கத்தின் பிரிவு, தமது வானத்து அடையாளம் காட்டி வெற்றி பெற்ற மார்க்கத்தை ஏற்கவும், அவர் அம்மதத்தை ஏற்க மறுத்தால் தமது சொத்தில் பாதியை உண்மை மார்க்கத்திற்கு உதவியாக வெற்றி பெற்ற மார்க்கத்தினரிடம் கொடுத்து விட வேண்டும் என்பது மட்டும் போதுமானது.”

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 48)

மேலும் எழுதினார்கள்: “அந்த ஒரு வருடத்திற்குள் இரு பிரிவினருக்கு ஆதரவாகவும் எந்த அடையாளமும் வெளியிப்படவில்லை எனில் அல்லது இரு தரப்பில் வெளிப்பட்டது எனில் இந்நிலையிலும் கூட இதனை எழுதுகிற நான் என்னை தோற்றவனாகக் கருதுவேன். கூறப்பட்ட தண்டனையை ஏற்கத் தயாராக இருப்பேன். ஏனெனில் நான் இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டுள்ளேன். வெற்றிக்கான நற்செய்தி பெற்றுள்ளேன். எந்தக் கிறித்தவராவது எனக்கு எதிரில் வானத்து அடையாளம் காட்டி விட்டால் அல்லது நான் ஒரு வருடத்திற்குள் காட்ட முடியாமல் போனால் எனது பொய் வெளிப்பட்டு விட்டதாகும். எனது உண்மைக்கு எனது சார்பாக முபாஹிலாவுக்கு ஒரு வருடத்திற்குள் நிச்சயம் அடையாளம் வெளிப்படுவது அவசியமாகும். மேலும் அடையாளம் வெளிப்பட்டு விட்டால் நான் இறைவன் புறமிருந்து வரவில்லை. அதே தண்டனை மட்டுமல்ல. மரண தண்டனைக்குத் தகுதியானவன் ஆவேன்.”

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 49)

அன்னார் அடையாளம் வெளிப்படல் மற்றும் முபாஹிலா பற்றி விவாதத்தின்போது மீண்டும் மீண்டும் எதிர் தரப்பினருக்கு கவனமூட்டினார்கள். ஆனால் அவர்களில் எவரும் இந்த ஆன்மீகப் போட்டிக்குத் தயாராக இல்லை. அப்துல்லாஹ் ஆத்தம் தனது ஒரு கடிதத்தில் தெளிவாக எழுதினார். “பழைய போதனைகளைப் பொருத்தவரையில் அதற்காக புதிய அற்புதங்களின் தேவை இருப்பதாக நான் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே நாங்கள் அற்புதத்தை விரும்பவில்லை. அதற்கான தகுதியும் எமக்குள் கொண்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், ஜனாப், ஏதாவது அற்புதம் காட்டத் தயார் என்றால் அதனைப் பார்ப்பதை விட்டும் கண்களை மூடிக் கொள்ளமாட்டோம். உங்கள் தவறுகளுக்கு அற்புதங்களால் எவ்வளவு சீர்திருத்தம் செய்ய முடியுமோ அதனைச் செய்வது உங்கள் கடமை என்று கருதுவோம்.”

(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 52)

ஹுஸூர் (அலை) அவர்கள் அடையாளங்களைப் பார்த்த பிறகு தாமதிக்காமல் முஸ்லிம் ஆகிவிட வேண்டும் என்ற நிபந்தனையை வைத்தார்கள். மிஸ்டர் அப்துல்லாஹ் ஆத்தம் 9 மே 1893 –ல் எழுதிய தமது கடிதத்தில் கீழ்க்கண்ட வார்த்தைகளில் அதனை ஏற்றுக் கொண்டார். “ஜனாப் அவர்களே! அல்லது வேறு ஏதாவது ஒரு சாஹிப் ஏதாவது சூழலில் அதாவது ஒன்றுபட்ட அற்புதமாக அல்லது திருக்குர்ஆனின் அறிவிப்பூர்வ போதனைகளை சாத்தியமான மற்றும் இறைவனின் தூய பண்புகள் மூலம் நிரூபித்துக் காட்டினால் முஸ்லிம் ஆகி விடுவேன் என்று ஒப்புக் கொள்கிறேன்.”

(சச்சாயிகா இஸ்ஹார், ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 80)

விவாதத்தின் நிபந்தனைகள் முழுமைப்படுத்தப்பட்டன. சண்டியாலா முஸ்லிம்கள் தமது திருப்தியை வெளிப்படுத்தி விட்டனர். ஆனால் பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் மற்றும் பிற பாதிரிகளுக்கு, டாக்டர் கிளார்க் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் விவாதம் செய்வது விருப்பமானதாக இருக்கவில்லை. எனவே ஷைக் நூர் அஹ்மது சாஹிப் என்ற ரியாஸ் அமிர்தசரஸின் பிரஸ் உரிமையாளர் தமது ‘நூர் அஹ்மது’ என்ற பத்திரிகை பக்கம் 22 –ல் எழுதியுள்ளார். அவர் மேஸ்திரி குத்புத்தீன் சாஹிப், பாதிரி இமாதுத்தீன் சாஹிபிடம் எந்தப் பாதிரி சாஹிபை கிறித்தவர் சார்பாக விவாதத்தில் எடுத்து வைக்கப் போகிறீர்கள்? என்பதை விசாரிப்பதற்காக சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடமிருந்து கடிதத் தொடர்பு ஏற்பட்டு விட்டது. நீங்கள் இந்த விவாதத்தில் விவாதம் நடத்துபவராக இருப்பீர்களா? என்று கேட்டதற்கு அவர் நான் இந்த விவாதத்தை வீணானதாகக் கருதுகிறேன். முதலில் நான் ஏன் செய்ய வேண்டும்? என்றார். உடனே நான் சண்டியலாலா சம்பவத்தைக் கூறியதும் ஹென்றி மார்ட்டின் கிளார்க் அடிமையாவார் என்றார்.

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரதிநிதிகளை, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஹுஸூர் (அலை) அவர்கள் அமிர்தசரஸ் அனுப்பி இருந்தார்கள். அவர்கள் இரயில்வே சந்திப்பிலிருந்து நேரடியாக டாக்டர் மார்ட்டின் கிளார்க் மாளிகைக்குச் சென்று சேர்ந்து விட்டார்கள். டாக்டர் கிளார்க் சாஹிப் தமது பணியாளிடம் வந்தவர்களுக்கு நாற்காலி கொடுக்குமாறு கட்டளையிட்டு விட்டு தாம் இன்னொரு வாசல் வழியாக அப்துல்லாஹ் ஆத்தம் மாளிகைக்குச் சென்றார். அது அருகில்தான் இருந்தது. இந்தக் காலக்கட்டத்தில் மியான் முஹம்மது பக்ஷ் சாஹிப் பாந்தாவும் சண்டியாலாவிலிருந்து வந்து விட்டார்.

டாக்டர் கிளார்க், ஆத்தமிடம் சென்று காதியானிலிருந்து சிலர் விவாதத்தின் சட்டதிட்டத்திற்கான நிபந்தனை மற்றும் தேதிகளை முடிவு செய்வதற்காக வந்துள்ளனர். நீர் சென்று தேதி நிபந்தனை போன்றவற்றை முடிவு செய்யுங்கள் என்றார். ஆத்தம் காதில் கையை வைத்தவாறு, டாக்டர் சாஹிப், ஒரு நூறு பிற மல்லவிகள் இருந்தாலும் பரவாயில்லை. நீர் எந்தப் பிரச்சனையில் சென்று கை வைக்கிறீர்? மிர்ஸா காதியானி இடம் எதிர்த்து நிற்பதும் அவரை மடக்குவதும் எளிதல்ல. மிகவும் சிரமமாகும். நீர்தான் இந்தப் பிரச்சனையை எடுத்தீர். நீரே சென்று வேலை செய்யும். நான் ஒருபோதும் வரமாட்டேன். அதில் பங்கு பெறவும் மாட்டேன் என்று கூறினார்.

டாக்டர் சாஹிப், நீர் கிறித்தவ சமூகத்தின் வீரர் ஆவீர். நீர்தான் இப்பணியை எளிதாகச் செய்ய முடியும். உம்மை நம்பியே நான் இப்பணியைத் தொடங்கினேன். நீர் அதனை மறுக்கிறீர். நீர் நிச்சயமாக கலந்து கொள்ள வேண்டும். இறுதியில் மணிக்கணக்கான விவாதத்திற்குப் பிறகு தைரியமூட்டி டாக்டர் சாஹிப், ஆத்தம் சாஹிபை அழைத்து வந்தார். அப்துல்லாஹ் ஆத்தம்

உடைய இந்த உரையாடல் கான்ஸாமான் உடைய முஸ்லிமால் பிறகு தெரிய வந்தது. இருவரும் வந்தனர். ஆசணங்களில் அமர்ந்தனர். அப்போதும் ஆத்தம் சாஹிப் நாவிலிருந்து அவரை அறியாமல் 'அய்யோ! நான் செத்தேன்' என்ற சொற்கள் வெளிவந்தன. பிறகு நிபந்தனை முடிவு செய்யப்பட்டது.

(ரிஸாலா நூர் அஹ்மது பக்கம் 24)

மேலும் பட்டாலாவின் மவ்லவிமார்கள் அந்த மாளிகைக்கு வந்து மற்ற உலமாக்களுடன் ஏன் நீங்கள் விவாதம் செய்யவில்லை? என்று கேட்டனர். மிர்ஸா சாஹிபுடன் ஏன் விவாதம் செய்ய சம்மதித்தீர்கள்? அவரை எல்லா ஆலிம்களும் காஃபிர் என்று கூறுகின்றனர் என்றார். அவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பெரிய போர்ச் செல்வமாகக் கருதியவாறு டாக்டர் கிளார்க் கூறினார். நான் முன்னரே கூறி விட்டேன். மிர்ஸா சாஹிபிடம் விவாதம் செய்வது எளிய காரியமல்ல. இந்தச் சந்தர்ப்பம் சிறந்தது. இது நமக்கு கிடைத்திருக்கிறது. மிர்ஸா சாஹிபிடம், இந்த மவ்லவிகளிடம் நிச்சயமாக நீங்கள் விவாதம் செய்யுங்கள். எந்தத் தீங்கும் இல்லை என்று பதில் கூறி விடுங்கள்.

(ரிஸாலா நூர் அஹ்மது பக்கம் 24)

உடனே டாக்டர் கிளார்க் 12 மே 1893 –ல் ஒரு பிரசுரம் வெளியிட்டார். நூர் அப்ஷான் உடைய முன்னுரையாக 12 மே 1893 –ல் வெளி வந்தது. இந்தப் பிரசுரம் வெளியிட்டதில் அவர்களின் நோக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் விவாதம் செய்யக் கூடாது என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. இந்த நோக்கத்தில் சண்டியாலா முஸ்லிம்களை அன்னார் மீது தப்பெண்ணம் கொள்ளச் செய்வதற்காக மவ்லவி முஹம்மது ஹுஸேன் பட்டாலவி மற்றும் பிற ஆலிம்களை குஃப்ர் (மறுப்பு மார்க்கத் தீர்ப்பு) பற்றிக் குறிப்பிட்டு இஷாஅத்துஸ் ஸுன்னாவில் வெளியிடப்பட்டது. மேலும் இஷாஅத்துஸ் ஸுன்னாவை வாங்குமாறு பிரகடனம் செய்யப்பட்டது.

(கிதாபு இஷாஅத்துஸ் ஸுன்னத்துன் நுபுவ்வத் மவ்லவி அபு ஸயீது முஹம்மது ஹுஸைன் சாஹிபிடம் இருந்து வாங்கி பார்க்கலாம். விலை 8 அனா, லாஹூரில் கிடைக்கும்.)

இந்தப் பிரசுரத்தில் டாக்டர் கிளார்க் சண்டியாலா முஸ்லிம்களை விளித்து எழுதினார்: "நீங்கள் ஒரு பெரியவரை விவாதத்திற்கு எடுத்து வைக்கிறீர்கள். முதலில் அவரை ஒரு முஹம்மதிய மனிதராகவே கருதுவது சிரமம். அன்னார் உங்கள் கருத்திலிருந்து மாறியுள்ளார். பஞ்சாப் மற்றும் இந்திய இஸ்லாமிய உலமாக்கள் மிர்ஸா குலாம் அஹ்மது பற்றி எழுதியுள்ளதைப் பார்க்கவில்லையா?"

மேலும் எழுதினார்: "நீங்கள் வினோதமான கவனமின்மையில் மூழ்கியுள்ளீர்கள். இதுவரை இந்த நூலை (அதாவது இஷாஅத்துஸ் ஸுன்னா பிரதி எடுப்பவர்) பார்க்கவில்லை. மிக நன்றாக உள்ளது. அவருக்கு சண்டியாலா இஸ்லாமியர்கள் ஜனாஸா தொழுவது கூட அனுமதிக்கப்படாததாக இருக்கும்போது அவரை உங்கள் தலைவராக நிர்ணயித்திருக்கிறீர்கள். வாஹ் சாஹிப்! வாஹ்! உங்களது புரிதிறன்தான் என்ன?"

(சச்சாயிகா இஸ்ஹார். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 73)

ஆனால் சண்டியாலா முஸ்லிம்கள் இந்தப் பிரசுரத்தை பொருட்படுத்தவில்லை. மியான் முஹம்மது பக்ஷ் சாஹிப் ஹஸ்ரத் பாதிரி சாஹிபுகளுக்கு பதில் எழுதினார்: "எந்த மார்க்கத்திலும் முரண்பாடுகள் இல்லாமல் இல்லை. கிறித்தவர்களும இதிலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர். முஸ்லிம்களுக்கு ஆதரவாக உள்ள ஒருவரை காஃபிர் என்று கூறக் கூடியவரை குழப்பவாதி என்று நாங்கள் கருதுகிறோம்.

(சச்சாயிகா இஸ்ஹார். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 73, 74)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பாதிரிகளிடம் தெளிவுபடுத்தி விட்டார்கள். உங்கள் எழுத்துக்கள் மற்றும் வாக்குறுதிகள் மற்றும் நீங்கள் ஒப்புக் கொண்ட நிபந்தனைகள் எங்களிடம் உள்ளன. எனவே இப்போது நீங்கள் விவாதம் செய்ய வேண்டும் அல்லது தோல்வியை ஒப்புக் கொண்டு பத்திரிகையில் அறிவிப்பு செய்ய வேண்டும். இறுதியில் பாதிரிகளுக்கு தப்பியோட வழி இல்லாமல் போய்விட்டது. உள்ள விருப்பமின்றி விவாதம் என்ற கசப்பான குவளையை அருந்த வேண்டியது வந்தது. டாக்டர் கிளார்க் மாளிகையில் இரு தரப்பும் ஒப்புக் கொண்ட நிபந்தனையின்படி விவாதம் 22 மே 1893 –ல் தொடங்கி 5 ஜூன் 1893 வரை நடந்து முடிந்தது.

இந்தப் புனிதப் போர் சிலுவையை முறிப்பவருக்கும் சிலுவையின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடைபெற்றது. இதில் இஸ்லாமிய வீரரின் கரம் களத்தில் இருந்தது. சிலுவை ஒட்ட முடியாத அளவுக்கு உடைந்து போய் விட்டது. முஸ்லிம்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சிலுவை ஆதரவாளர்களிடம் ஒப்பாரியே நிகழ்ந்தது.

### ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆன்மீக ஆயுதம்:

ஹதீஸில் வருகிறது. மஸீஹ் மவ்வூது தஜ்ஜாலை தமது தாக்குதலினால் ஒரே அடியில் கொன்றொழிப்பார். மேலும் ஒரு ஹதீஸில் வருகிறது. அவர் பாபே லுத் –இல் கொல்வார். லுத் அரபி மொழியில் அலத் உடைய பன்மை ஆகும். அதாவது கம்பீரமிக்க விவாதத்தில் வெற்றி கொள்வார். ஆகவே மஸீஹ் மவ்வூது மற்றும் அவரது தோழர்கள் தஜ்ஜாலை விவாதங்களின் வாசலில் கொலை செய்வர் என்ற சைக்கினை உள்ளது.

இந்த வகையில் இந்த முன்னறிவிப்பு முழுமையான மகிமையுடன் வெற்றி பெற்றது. சிலுவையை முறிப்பவராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடக்க விவாதத்திலேயே ஒரு தாக்குதல் தொடுத்தார்கள். இதனால் அவர்களின் ஆயுதம் பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் மற்றும் அவரது உதவியாளர்களை இறுதி வரை பாதி மரித்தவர் போன்று ஆக்கியது. அங்குமிங்கும் சென்றார்கள். ஆனால் உண்மையான பதில் தர முடியவில்லை; முடியாது. அன்னாரின் வெற்றியின் போராக இருந்தது.

அன்னார் கூறுகிறார்கள்: விவாதத்தில் மிகவும் அவசியமானது நமது தரப்பில் ஒரு கேள்வியும், டெபுடி ஆத்தம் சாஹிப் தரப்பில் அதற்கு ஒரு பதிலும் அதுவும் தமது தரப்பில் அல்லாமல் தமது இல்ஹாம் நூலிலிருந்து ஆதாரம் காட்டி எடுத்து வைக்க வேண்டும். அதனை மறுதரப்பு ஆதாரமாகக் கருத வேண்டும். மேலும் எந்தவொரு ஆதாரமோ வாதமோ எடுத்து வைக்கப்பட்டால் அதுவும் இந்த அடிப்படையில் இருக்க வேண்டும். சுருக்கமாக, எந்தவொரு பிரிவும் தமது வேதத்திலிருந்து வெளியில் வரக் கூடாது. அதுவே ஹிஜ்ஜத் (சான்று) எனப்படும்.

(ஜங்கே முகத்தஸ். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 89)

விவாதம் முழுவதும் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை படிக்க வேண்டும். கிறித்தவர்கள் விவாதத்தை கடைசி வரை தரத்தை நிலைநாட்ட முடியாது என்பது தெளிவாகும். மாறாக, ஆச்சரியம்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

ஒரு நபர் எந்த அளவுக்கு அருட்களைப் பெற முடியுமோ மேலும் இறை நெருக்கத்தைப் பெற முடியுமோ அது முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையாக கட்டுப்படுதல் மற்றும் முழுமையான அன்பின் மூலமாகவே முடியும். அது அல்லாமல் அது சாத்தியமற்றது. மேலும் அன்னாரின்றி நல்வழிக்கான எந்த வழியும் கிடையாது என்பதே எனது மார்க்கமாகும்.

(லெக்சர் லூதியானா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 260)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

என்னவென்றால், அவர்கள் வாதம் மற்றும் ஆதாரத்திற்கிடையில் வித்தியாசம் செய்யக் கூட இயலவில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து எடுத்து வைத்த வாதங்களை அறிவிப்பூர்வமான ஆதாரத்துடன் எடுத்து வைத்தார்கள்.

**பாதிரிகளின் வட்டம்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விவாதத்தின்போது மீண்டும் மீண்டும் உயிருள்ள மார்க்கத்தை உணர புத்தம்புது அடையாளங்களைக் காட்ட வேண்டும் என்று கூறினார்கள். மேலும் வாதி எதனை தமது இல்ஹாம் நூல் என்று கருதுகிறாரோ அதிலிருந்து முஃமீன்களுக்காக கூறப்பட்ட அடையாளங்களை தமது தரப்பிலிருந்து நிரூபித்துக் காட்ட வேண்டும். அவரே சுத்தமான முஸ்லிம் அல்லது கிறித்தவர் ஆவார். மேலும் தாம் மிகவும் அழுத்தமான ஆவேசமான வார்த்தையை வைத்தார்கள். திருக்குர்ஆனில் விளக்கப்பட்ட ஈமானின் அடையாளங்கள் தமது இருப்பில் நிரூபித்துக் காட்டுவேன் என்றார்கள்.

மேலும் ஒரு வருடத்திற்குள் அல்லாஹ் விரும்பினால் எத்தகைய அடையாளம் காட்டுவான் எனில் அதனை ஒருபோதும் எதிர் தரப்பு காட்ட இயலாது. பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் இந்த அழைப்பை ஏற்பதற்கு முடியாமல் நழுவினார். ஆனால் பல நாள் யோசித்து உருவாக்கிய திட்டத்திற்கு ஏற்ப ஒரு தாக்குதல் தொடுத்தார். அது குறித்து அவருக்கு உறுதியான எண்ணம் இருந்தது. அந்த தாக்குதலால் எதிர் தரப்பு நிச்சயமாக தோல்வி அடையும் என்று கருதினார். நாம் வெற்றியின் முழக்கம் இடலாம் என்று கருதினார். அது என்னவெனில் 26 மே 1893 –ல் விவாதம் நடந்த நாளில் பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் இந்த விளக்கம் எழுதச் செய்தார்.

“கிறித்தவர்களாகிய நாங்கள் பழைய போதனைகளுக்கு புதிய அற்புதங்களில் தேவை இல்லை என்றும், தமக்கு அதற்கான தகுதியில்லை என்றும், மேலும் அடையாளம் காட்டுவதாக தாம் வாதம் செய்யவில்லை என்றும் ஜனாபுக்கு தான் அதில் பெரிய பெருமிதம் காணப்படுகிறது. எனவே பார்க்கின்ற அற்புதத்தை எம்மாலும் மறுக்க முடியாது. ஆகவே நாங்கள் இந்த மூன்று பேரை எடுத்து வைக்கிறோம். அதில் ஒருவர் குருடர்; ஒருவர் செவிடர்; ஒருவர் ஊமையர். அவர்களில் எவரையேனும் குணப்படுத்திக் காட்டுங்கள். அப்போது நாங்கள் பதில் தர வேண்டியது வரும். நீங்கள் உங்கள் கூற்றின்படி எத்தகைய இறைவனை நம்புகிறீர்கள் எனில் அவன் பேசக் கூடியவன் இல்லை. ஆனால் உண்மையில் சக்தி வாய்ந்தவன் ஆவான். ஆனால் உண்மையில் அவன் ஆரோக்கியமும் வழங்க சக்தி உள்ளவன். பிறகு என்ன யோசனை?

உங்கள் கூற்றின்படி நீங்கள் நம்பிக்கையாளர் எனில் நிச்சயமாக இறை படைப்பினம் மீது கருணை காட்டுங்கள். விரைவாக செய்யுங்கள். உங்களுக்கு இன்று இந்த பிரச்சனை வரப்போகிறது என்று தெரிந்திருக்கும். இறைவன் இல்ஹாம் மூலம் உங்களுக்கு தகவல் தந்திருப்பான். இந்தப் போர்க்களத்தில் உமக்குதான் வெற்றி என்று கூறியிருப்பான். அத்தடன் குருடன் மற்றும் மற்ற பிரச்சனை உள்ளவர்கள் கொண்டு வரப்படுவார்கள் என்றும் கூறியிருப்பான். எனவே எல்லா கிறித்தவ சாஹிபுகள் மற்றும் முஹம்மதிய சாஹிபுகள் மத்தியில் இந்த சவாலை நிறைவேற்றும்.”

(ஜங்கே முகத்தஸ். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 150–151)

எதிர் தரப்பின் இந்தத் தாக்குதல் சிலுவையை முறிப்பவரின் எதிரில் எத்தகையது எனில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எதிரில் சூனியக்காரர்கள் கயிறுகளையும் தடிகளையும் பார்வையாளர் முன்னிலையில் வீசி தமது வெற்றியை அறிவித்தது போன்றதாகும். அதனைப் பார்த்து மூஸா (அலை) அவர்கள் உள்ளத்தில் சிறிது பயம் ஏற்பட்டது. இறை படைப்பினங்கள் சூனியக்காரர்களின் செயல்களைப் பார்த்து இதுதான் உண்மை என்று நினைத்து விடக்கூடாதே என்ற பயம் ஏற்பட்டது. அல்லாஹ் அப்போது அவரிடம் கைத்தடியை எறியுமாறு வழிகாட்டல் வழங்கினான். நீயே வெற்றி அடைவாய் என்ற நற்செய்தியையும் வழங்கினான்.

ஆனால் இந்த விவாதத்தைப் பார்த்தவர்களின் உள்ளத்தில் ஒரு பயம் ஏற்பட்டது. அவர்கள் நினைத்தனர். அன்னார் இந்தத் தாக்குதலுக்கு என்ன பதில் தரப் போகிறார்கள்? கிறித்தவர்களின் உள்ளத்தில் அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. நாம் எத்தகைய தாக்குதல் தொடுத்து விட்டோம் எனில் இதன் விளைவாக நிச்சயமாக நமக்கு வெற்றி கிடைக்கும். ஆனால் அல்லாஹ்வின் சிங்கம் முதலிலேயே வல்லமைமிக்க இறைவனிடமிருந்து வெற்றி பற்றிய நற்செய்தி பெற்றிருந்தார்கள். எனவே மன அமைதியுடன் இருந்தார்கள். அன்னாரின் முகத்தில் கவலையின் எந்த அறிகுறியும் இல்லை. முடிவாக அன்னார் தமது நேரத்தை எதிர்பார்த்திருந்தார்கள். பாதிரிகளின் பொய்யை ஹபஅன் மன்சூரா ஆகக் காட்டுவதற்காக எதிர்பார்த்திருந்தார்கள். பாதிரி தமது விளக்கத்தை எழுதி முடித்ததும் அன்னார் மிகவும் கம்பீரமாக தமது விளக்கத்தை எழுதத் தொடங்கினார்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் உண்மையான கிறித்தவர்கள் எனில் கூறுங்கள். உங்கள் மார்க்கத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஈடேற்றத்தின் அடையாளம் அல்லது உண்மையான ஈமான் உள்ளவர்கள் என்று கூறிய விஷயங்கள் உங்களிடம் எங்கே உள்ளது? உதாரணமாக, மாதஸ் 16/17 –ல் ‘ஈமான் உள்ளவர்களிடம் அவர்கள் நோயாளிகள் மீது கை வைத்தால் அவர்கள் குணம் பெறுவார்கள்’ என்று எழுதப்பட்டுள்ளது. இப்போது நான் மரியாதையுடன் வேண்டுகிறேன். இந்த வார்த்தைகளில் ஏதாவது உண்மை சரிப்படுத்தல் இருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் எடுத்து வைத்துள்ள மூன்று நோயாளிகளையும் கிறித்தவர்களின் சிறப்பான அடையாளமாக ஈஸா (அலை) அவர்கள் கூறியுள்ளபடி நீங்கள் உண்மையான ஈமான் உள்ளவர்கள் எனில் அதன் அடையாளமாக நோயாளிகளை கை வைத்து விட்டால் போதுமானது. குணமடைந்து விடுவார்கள். இப்போது கூறுவதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உண்மையான ஈமான் உள்ளவர்கள் எனில் நீங்கள் எடுத்து வைத்த மூன்று நோயாளிகளும் உள்ளனர். கை வைத்துக் குணப்படுத்துங்கள். அதனால் நிச்சயமாக நீங்கள் உண்மையான ஈமான் உள்ளவர்கள் என்றும் ஈடேற்றத்திற்கு உரியவர்கள் என்றும் ஒப்புக் கொள்கிறேன். அது அல்லாமல் ஒப்புக் கொள்ள வழியில்லை.

ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் இவ்வாறும் கூறுகிறார்: உங்களிடம் அணு அளவு ஈமான் இருந்தாலும் ஒரு மலையைப் பார்த்து அகன்று செல் என்று கூறினால் அது அகன்று விடும். ஆனால் நான் இப்போது மலையை நகர்த்தச் சொல்லவில்லை. ஏனென்றால் மலை நமது இந்த இடத்தை விட்டுத் தூரத்தில் உள்ளது. ஆனால் சிறந்த நடைமுறை நம்மிடம் நீங்கள் எடுத்து வைத்துள்ள நோயாளிகள் மீது குணமாக்கிக்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

இறைவன் தனது வாக்குறுதிக்கு ஏற்ப வலுவான தாக்குதல்கள் மூலமாக எனது உண்மையை வெளிப்படுத்துவான். நான் இட்டுக்கட்டிப் பொய்யைப் புனைந்து கூறுபவனாக இருந்தால் அவன் என்னை உடனடியாக அழித்திருப்பான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்... என்னைப் பொய்ப்படுத்துவது அவனைப் பொய்ப்படுத்துவதாகும். எனவே, சுயமே அவனே எனது உண்மையை வெளிப்படுத்தி விடுவான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 34–35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

A.Basheer Ahmad, Melapalayam

காட்டுங்கள். இல்லை எனில் அணு அளவு ஈமான் கூட கை விட்டுப் போய் விட்டது. ஆனால் நீங்கள் தெளிவாக உணருங்கள். இந்த ஆட்சேபனை எங்களுக்கு பொருந்தாது.

ஏனெனில் அல்லாஹ் ஜல்லஸானுஹூ திருக்குர்ஆனில் எமக்கு இந்த அடையாளத்தைக் கூறவில்லை. நீங்கள் நோயாளிகள் மீது கை வைத்தால் அவர்கள் குணம் பெறுவர். இதுவே உங்கள் சிறப்பான அடையாளம் என்று கூறவில்லை. ஆம்; இதனைக் கூறினான். நான் எனது திருப்திற்கு ஏற்ப உங்கள் துஆவை ஏற்றுக் கொள்வேன். குறைந்தபட்சம் ஒரு துஆ ஏற்றுக் கொள்ளத் தகுதியானது இல்லை எனில் ஒரு காரணத்திற்கேற்ப அது குறித்து தகவல் தரப்படும். நீங்கள் விரும்பியது அனைத்தும் அப்படியே (இக்திகாரியாக) நிறைவேற்றப்படும் என்று கூறப்படவில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் உடைய இந்தக் கட்டளை என்னவெனில், நோயாளிகளைக் குணமாக்குவதற்கு தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சுதந்திரம் வழங்கி உள்ளார் என்று காட்டுகிறது.

மத்தேயு அத்தியாயம் 1 –ல் வருகிறது. இப்போது அவரது கடமை அவரது ஈமான் உள்ளவரின் அடையாளமாக ஆகி விட்டது. நீங்கள் இந்த நோயாளிகளை குணமாக்கிக் காட்டுங்கள். மேலும் ஒரு அணு அளவு கூட உங்களிடம் ஈமான் இல்லை என்று உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களது கொள்கையாகிய ஹஸ்ரத் மஸீஹ் உயிருடன் நிரந்தரமாக இருக்கிறார். அவர் மறைவானவற்றை அறிந்தவராக இரவும் பகலும் உங்களுடன் இருக்கிறார். அவர் விரும்புவதை தர முடியும் எனில் நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் இடம் விண்ணப்பியுங்கள். இந்த மூன்று நோயாளிகளையும் உங்கள் கை வைத்தவுடன் குணமாக்க வேண்டும்.

அதன் மூலம் ஈமான் உடையவரின் அடையாளத்தை உங்களிடம் தர வேண்டும். இல்லை எனில் ஒருபுறம் உண்மையாளர்களுடன் கிறித்தவர் என்ற முறையில் வாதம் செய்து விட்டு உண்மையான கிறித்தவருக்குரிய அடையாளத்தைக் கேட்கும்போது எவரிடமும் அதற்குரிய ஆற்றல் இல்லை என்று கூறுவது பொருத்தமானதல்ல. நீங்கள் உங்கள் மார்க்கம் ஓர் உயிருள்ள மார்க்கம் இல்லை என்று ஒரு டிகிரி செய்ய வைக்கிறீர்கள். ஆனால் நாங்கள் இறைவன் மீது உண்மையான ஈமான் உள்ளவர் என்பதற்கு அடையாளம் தருகிறோம். எவ்வளவு முறையான ஓர் அடையாளம் எனில் அதனைக் காட்ட முடியா விட்டால் தண்டனை வழங்குங்கள். எத்தகைய கத்தியையும் கொண்டு எமது கழுத்தைக் கிழியுங்கள்.

(ஜங்கே முகத்தஸ். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 153–155)

மேலும் அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் கூட உடனடியாக செய்து காட்டும் அற்புதம் ஆகிய இக்திகாரி அடையாளம் காட்ட முடியாமல் இருந்தார். அந்த வகையில் மாகஸ் 8/11, 12 –ல் எழுதுகிறார். பரிசேயர் வந்ததும் சோதிக்க வானத்து அடையாளம் கேட்டதும் அவர் தமது உள்ளத்தால் 'ஆ' என்று இழுத்து விட்டுக் கூறினார். இக்காலத்தில் மக்கள் ஓர் அடையாளம் கேட்கிறார்கள். நான் உங்களிடம் உண்மையாகக் கூறுகிறேன். இப்போது மக்களுக்கு அடையாளம் எதுவும் தரப்படாது.

பிறகு இதனை விட வினோதமாக இன்னோரிடத்தில் பாருங்கள். மஸீஹ் சிலுவையில் அறையப்பட்டதும் யூதர்கள் கூறினர். இவர் மற்றவர்களை காப்பாற்றினார். தம்மைக் காப்பாற்ற முடியவில்லை. இஸ்ராயீல்களின் அரசன் எனில் சிலுவையிலிருந்து இறங்குங்கள். நாங்கள் ஈமான் கொள்கிறோம்... ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் இறங்க முடியவில்லை....

(ஜங்கே முகத்தஸ். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 155–156)

### விவாத நிபந்தனைகளின் ஒளி:

மேலும் கூறினார்: இது பற்றி நான் அழைப்பது டெபுடி அப்துல்லாஹ் ஆத்தம் சாஹிப் ஆவார். சம்பந்தப்பட்ட அந்த சாஹிப் இஞ்சீல் ஷரீஃபில் கூறப்பட்ட அடையாளங்களுங்கு ஏற்ப உண்மையான ஈமான் உடையவரின் அடையாளத்தைத் தம்மிடம் நிரூபித்துக் காட்ட வேண்டும். மறுபுறம் என் மீது நிச்சயமாக கடமை ஏற்படும். நானும் உண்மையான ஈமான் உடையவரின் அடையாளங்களை திருக்குர்ஆனிலிருந்து காட்டி என்னிடம் நிரூபித்துக் காட்ட வேண்டும். ஆனால் இந்த இடத்தில் நினைவில் கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் எம்மிடம் உடனடி அற்புதம் வழங்கவில்லை. மாறாக, எமது உடலில் ஒரு திருத்தம் ஏற்படத்தக்க ஒரு வார்த்தையை எந்த அடையாளம் காட்டுவான் என்று நமக்குத் தெரியாது. அவனே இறைவன்.

எனவே அவனைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை. ஆம்; எமது தரப்பில் இவ்விஷயத்தில் உறுதியான வாக்குறுதி உண்டு. அல்லாஹ் ஜல்லஸானுஹூ நிச்சயம் போட்டியின்போது வெற்றி தருவேன் என்று என் மீது வெளிப்படுத்தியுள்ளான். ஆனால் எந்த வகையில் இறைவன் அடையாளம் தருவான் என்று எமக்குத் தெரியாது. அசல் வாதி அவன்தான். அடையாளம் எத்தகையது எனில் அது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஜங்கே முகத்தஸ். ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 157)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த பதிலைத் தர இருந்தார்கள். பாதிரிகள் எடுத்து வைத்த நோயாளிகளைச் சபையில் மறையச் செய்தார்கள். பூமியே அவர்களை விழுங்கியது போன்று பாதிரிகளின் இந்த சூனியமான நடவடிக்கை முற்றிலும் பயனற்றதாகி விட்டது. மேலும் நிரந்தரமாக அவர்களின் கையில் கிளார்க் உடைய ஊசி இறைவனின் வீரர் சிலுவையை முறித்து வெற்றி கண்டார் என்று நிரூபித்துக் காட்டி விட்டது.

### அடையாளம்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடையாளம் காட்டுவதன் கவனமும் துஆவின் மன்றாட்டமும் தான் இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அல்லாஹ் எதிர்தரப்பு பற்றி அன்னாருக்கு அடையாளத்துடன் அறிவித்தான். அது இந்த தொகுதியின் 291, 292 ஆகிய பக்கங்களில் உள்ளது.

ஆக பொய் கூட்டத்திற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் இடையே இந்த புனிதப்போர் நடைபெற்றது. இதில் சிலுவை மார்க்கம் உடைந்து விட்டது. மேலும் ஆதாரங்கள் மற்றும் அத்தாட்சிகள் மூலமாக தஜ்ஜால் நிரந்தரமாக கொல்லப்பட்டு விட்டான்.

### புனிதப் போரினால் ஏற்பட்ட விளைவு:

இந்த விவாதத்தின் விளைவு விவாதம் நடைபெற்றக் கொண்டிருந்த அந்த நாட்களிலேயே வெளிப்பட்டது. அமிர்தஸரைச் சார்ந்த மியான் நபி பக்ஷ் என்பவரும், ஹஸ்ரத் காஸி அமீர் ஹுஸைன் (ரலி) ஆகியோர் இந்த நாட்களிலேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். காஸி சாஹிப் அன்றைய நாட்களில் அமிர்தஸரிலுள்ள மத்ரஸா இஸ்லாமிய்யாவில் ஆசிரியராக இருந்தார்கள். அன்னார் அஹ்மதியாக மாறியதால் மவ்லவிமார்களின் வீடுகளில் கூச்சல் ஏற்பட்டது.

(ரிஸாலா நூர் அஹ்மது பக்கம் 30)

இதே போன்று கிறிஸ்தவவத்தை ஏற்றுக் கொண்டிருந்த கபூர்தலாவைச் சார்ந்த அல்தாஃப் அலி கான் சாஹிப் அவர்களும் இந்த நேரத்தில் கிறித்தவர்கள் சார்பாக விவாதத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். அவர்களும் இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

(ரிவிய்யூ ஆஃப் ரிலீஜியன், உருது பிரதி ஜனவரி 1940)

Love for All Hatred for None

எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு